Registered in Ceylon as a Newspaper

# ஈழநாடு

EELA NADU

போன்: 389 National Tamil Daily தேசிய தினசரி தபாற்பெட்டி எண்: 49

மலர் 4 யாழ்ப்பாணம் சுபகிருது வைகாசி 11 ஆம் நாள் துல்ஹஜ் 19 (24-5-62) வியாழக்கிழமை இதழ் []




யாழ்ப்பாணம் மாநகரசபை

# கலைக்கப்பட மாட்டாது

## நல்லூர் எம். பி. க்கு அமைச்சர் உறுதி

## விசாரணை செய்தபின்பே நடவடிக்கைபற்றி பரிசீலனை

யாழ்ப்பாணம், வியாழன்

**மாநகரசபை நிர்வாக நிலைமை சம்பந்தமாக ஸ்தலஸ்தாபன சேவைப்பகுதியைச் சேர்ந்த அதிகாரிகள் நேரில்சென்று ஆராய்ந்து அறிக்கை சமர்ப்பித்தபின்னரே சபையைக் கலைக்கவேண்டுமா? இல்லையா என்பதுபற்றி ஆராய்வோம் என்று ஸ்தலஸ்தாபன அமைச்சு அறிவித்துள்ளது.**

நல்லூர் எம். பி. டாக்டர் ஈ. எம். வி. நாகநாதன் ஸ்தலஸ்தாபனசேவை அமைச்சர் மகாநாம சமரவீராவைச் சந்தித்து யாழ்ப்பாண மாநகரசபை நிலைமைபற்றிப் பேசினர். மாநகர சபையைக் கலைக்கவேண்டுமென்று யாரும் கோரியவுடன் தீரஆராயாமலும் தகுந்த காரணங்களின்றியும் சபையைக் கலைத்துவிடமாட்டோம் என்று அமைச்சர் தெரிவித்ததாகத் தெரிகிறது.

இன்னும் சிலதினங்களில் சபை கலைக்கப்படுமென்ற கூற்றுக்கு ஆதாரமேயில்லையென்று டாக்டர் நாகநாதன் செனட்டர் நல்லையாவுக்குத் தந்திமூலம் தெரிவித்துள்ளார்.

முன்னர் அறிவித்துள்ளபடி திங்கட்கிழமை புதிய மேயர் தெரிவு நடைபெறும்.

**யாழ்ப்பாணம் மாநகரசபை கலைக்கப்படமாட்டாது என்று மாநகரசபை வட்டாரங்கள் நேற்று உறுதியாக அபிப்பிராயம் தெரிவித்தன.**

**மாநகரசபையைக் கலைப்பதற்கு எவ்வித நியாயமான காரணமுமில்லையென்றும் சபை கலைக்கப்படமாட்டாதென்றும் கூறப்படுகிறது.**

மாநகரசபையின் பெரும்பான்மை அங்கத்தவர்கள் ஒன்பதுபேரும் கைச்சாத்திட்ட மகஜர் ஒன்று ஸ்தலஸ்தாபன சேவைக் கமிஷனுக்கு அனுப்பிவைக்கப்பட்டுள்ளது.

மாநகரசபையைக் கலைப்பதற்கு உத்தரவிடப்பட்டால் வரியிறுப்பாளர்களும் பொது மக்களும் பெரும் கிளர்ச்சி செய்வார்களென்றும் சபையைக் கலைப்பது ஜனநாயக உரிமைகளையே பறிப்பதாகுமென்றும் வரியிறுப்பாளர் ஸ்தலஸ்தாபன அமைச்சருக்கு கடிதங்களும், மகஜர்களும் அனுப்பிவருகின்றனர்.

### இரு கோர விமான விபத்துக்கள்

சிக்காகோ, மே 23

சிக்காகோவுக்கும் கன்ஸாஸ் நக்ருக்குமிடையே சென்ற ஒரு போயிங் விமானம் விபத்துக்குள்ளாகியதால் 40 பிரயாணிகள் மாண்டனர்.

---

அமெரிக்க கடற்படையைச் சேர்ந்த விமானமொன்று நேற்று பிராங்போர்ட்டுக்குச் சமீபத்தில் பறந்து கொண்டிருக்கையில் திடீரென தீப்பிடித்து வெடித்துத் துண்டுகளாக விழுந்தது விமானத்திலிருந்த நான்கு கடற்படை அதிகாரிகளுட்பட 26 பேர்களும் மாண்டனர்.

### கொதி தண்ணீரை வீசினராம்

யாழ்ப்பாணம், வியாழன்

கொட்டடியிலுள்ள தேநீர்க் கடையொன்றில் ஒருவர் கொதி தண்ணீரைக் கடைக்காரரின் முகத்தில் வீசிவிட்டு ஓடிச் செல்லும் வழியில் ஒரு சோடாப் போத்தலை வீசியபோது அது ஒரு குழந்தைமீது பிடித்ததனல் குழந்தையின் முகத்தில் படுகாயம் ஏற்படுத்தியது. குழந்தை உடனே ஆஸ்பத்திரிக்கு எடுத்துச் செல்லப்பட்டது. அங்கு குழந்தையின் முகத்தில் தையல் போடப்பட்டதாகத் தெரிகிறது.

### திருஞானசம்பந்தர் குருபூசை

யாழ்ப்பாணம், வியாழன்

'தெய்வ அம்சம் பொருந்தியவராய் உதித்த திருஞானசம்பந்தப் பெருமான் செந்தமிழ் நாடெங்கும் சைவப் பேரொளியைப் பரவச்செய்துள்ளார். சைவ சமயம் என்றென்றும் புத்தொளியுடன் துலங்கவும் செய்து வைத்துள்ளார். அவர் செய்த சேவையை நாம் என்றும் போற்றி வாழ வேண்டியது கடமையாகும்.

வண்ணைநாவலர்வித்தியாசாலையில் செவ்வாய்க்கிழமை நடைபெற்ற திருஞான சம்பந்தர் குருபூசை வைபவத்திற் பேசிய பண்டிதர் வ. மு. இரத்தினேஸ்வர ஐயர் இவ்வாறு குறிப்பிட்டார்.

இவ்வைபவத்துக்கு ஆசிரியர் திரு. [] வை. ஆ. சர்மா தலைமை வகித்தார். தலைமையாசிரியர் வித்துவான் இ. திருநாவுக்கரசு, திரு. கா. கிருஷ்ணசாமி ஐயர் செல்வன் சி. கந்தவேல், சு. பாலசுப்பிரமணியம் ஆகியோரும் பேசினர்.

செல்வி சாந்தி தியாகேஸ்வரி, சி. யோகேஸ்வரி ஆகியோர் ஞானசம்பந்தர் தேவாரப்பதிகங்கள் சில பாடினர்.

---

கராச்சி, மே 23

கிழக்கு பாகிஸ்தான் நிலைமை பாகிஸ்தான் ஜனாதிபதி அயூப் கானுக்குத் தொல்லையை அளித்திருப்பதாய்க் கூறப்படுகிறது. கிழக்கு பாகிஸ்தான் விஷயமாக பாரபட்சம் காட்டப்படுவதாய்ப் புகார் கூறப்பட்டுவருகிறது.

## 'நூல் நிலையம் சகல மக்களுக்கும் உதவ வேண்டும்'

### யாழ்விநோத பொருட்காட்சியில் திரு. ஸாம் சபாபதி பேச்சு

யாழ்ப்பாணம், வியாழன்

"யாழ்ப்பாண பொதுசன நூல் நிலையம் யாழ்ப்பாணத்துத் தமிழர்களுக்கு மட்டும் உதவுவதாக இல்லாமல் இலங்கையிலுள்ள சகல மக்களுக்கும் உதவுவதாகச் செய்வதற்கு நாம் முயற்சி செய்யவேண்டும். இந்த பொதுசன நூல் நிலையம் நன்கு வளர்வதற்கு பொதுமக்கள் பெரிதும் ஆதரவுகொடுக்கவேண்டும்."

இவ்வாறு நேற்று மாலை யாழ்ப்பாணம் பொதுசன நூல் நிலையக் கட்டட நிதிக்காக ஏற்படுத்தப்பட்ட யாழ். விநோத விவசாயத் தொழில் பொருட்காட்சியைத் திறந்துவைத்துப் பேசுகையில் திரு. ஸாம். ஏ. சபாபதி குறிப்பிட்டார். தொடர்ந்து அவர் பேசுகையில் நூல் நிலைய வளர்ச்சிக்கு உதவிபுரிந்த பெரியார்களுக்கு யாழ்ப்பாண பொதுமக்கள் என்றும் கடமைப்பட்டவர்களாவார்கள் என்றும் அறிவையும் கலையையும் வளர்க்க நூல்நிலையம் அரிய தொண்டாற்றவேண்டும் என்றும் தெரிவித்தார்.

திரு. ஸாம் சபாபதியை வரவேற்றுப் பேசிய யாழ் மாநகர சபை அங்கத்தவர் திரு. டி. எஸ். துரைராஜா கூறியதாவது:

நூல்நிலைய வளர்ச்சியில் பெரும்பங்குகொண்டு உழைத்த ஒரு அங்கத்தவர் என்ற முறையிலேயே திரு. ஸாம் சபாபதி இந்தப் பொருட்காட்சியைத் திறந்துவைக்க வேண்டுமென நாம் விரும்பினோம். இந்த நூல்நிலையம் மேலும் வளர்ந்து நல்ல சேவை செய்யும்வகையில் பொதுமக்கள் எல்லோரும் ஆதரவுதர வேண்டும்."

யாழ்விநோத விவசாய கைத்தொழில் பொருட் காட்சி இம்முறை முன்னிலும் பார்க்க சிறப்பாக அமைந்துள்ளது.

நிறைவும் தறுவாயில் நிற்கும் நூல்நிலையத்துக் கருகாமையில் அமைந்த இந்தப் பொருட் காட்சியில் பல நல்ல விஷயங்களை பொதுமக்கள் பார்க்கக் கூடியதாக விருக்கிறது. விவசாயத்துக்கு வேண்டிய விஷயங்களும் கைத்தொழில் துறைக்கு வேண்டிய விஷயங்களும் கலையம்சம் நிறைந்த பொருள்களும கருத்துக்கும் கண்ணுக்கும் விருந்தளிக்கும் வகையில் அமைந்திருக்கின்றன.

### கருவாடு விநியோகம் ஆராயப்படும்

கொழும்பு, புதன்

கூட்டுறவு மொத்த விற்பனை நிலையத்தின் கருவாட்டுப்பகுதி செயல்படுவிதத்தை ஆராயும்படி வர்த்தக உணவுக் கப்பல் அமைச்சரின் நிரந்தரக் காரியதரிசி திரு. கே. ஆழ்வாப்பிள்ளை உணவு இலாகாவைக் கேட்டிருக்கிறார்.

கருவாட்டின் இறக்குமதி விறபனை முதலியவற்றில் நடைபெற்ற ஊளல் பற்றி அமைச்சரிடம் எம். பிக்களும் மக்களும் முறையிட்டதைத் தொடர்ந்தே இவ்வித நடவடிக்கை எடுக்கப்படுகிறது.

## தோட்டங்களில் இலங்கையரை வேலைக்கமர்த்தும் மசோதா

### பார்லிமெண்டில் மந்திரி சமர்ப்பித்தார்

கொழும்பு, புதன்

பார்லிமெண்ட் இன்று மாலை உப சபாநாயகர் திரு. ஹியூ. பெர்னண்டோ தலைமையில் கூடியபோது, தொழில் தேசிய சேவை மந்திரி திரு. எம். பி. டி' இசட். சிரிவர்தன இலங்கையர்களுக்கு தோட்டங்களில் வேலை அளிப்பது சம்பந்தமான ஒரு மசோதாவைச் சமர்ப்பித்தார்.

இம்மசோதா, தோட்டங்களில் எத்தனை இலங்கையரை வேலைக்கமர்த்தலாம் என்பதை நிர்ணயிக்கும் அதிகாரத்தை மந்திரிக்கு அளிக்கிறது.

இச்சட்டத்தை நிர்வகிக்கும் பொறுப்பு தொழிற் கமிஷனருக்கு இருக்கும். அவசியமானபோது குறிப்பிட்ட தகவல்களையும் விளக்கங்களையும் சமர்ப்பிக்குமாறு தொழிற் கமிஷனர் தோட்ட முதலாளிமார்களைக் கோரும் அதிகாரத்துக்கும் மசோதாவில் வழி செய்யப்பட்டிருக்கிறது. தொழிற் கமிஷனர் அல்லது அவரால் அதிகாரமளிக்கப்பட்ட ஒருவர் தோட்டத்தில் பிரவேசித்து எந்த ஒரு தொழிலாளியையும் பரிசோதனை செய்ய மசோதாவில் இடமளிக்கப்பட்டிருக்கிறது. சட்டத்தை மீறுபவர்களுக்கு ரூ 500-க்கு மேற்படாத அபாரதமும், 6 மாதத்திற்கு மேற்படாத சிறைத் தண்டனையும் விதிக்க முடியும்.

திரு. தஹநாயக்காவின் கேள்வி ஒன்றுக்கு உதவி நிதி மந்திரி திரு. கருணாரத்ன பதிலளிக்கையில் சிறைக் கைதியான எட்டி பெரேரா அபின் சட்டத்தின் கீழ் 1958-ம் ஆண்டு ஜூன் மாதம் பத்தாண்டு கடும் காவல் தண்டனை விதிக்கப்பட்டார் என்றும் 4 தடவை அவருக்குத் தண்

(8-ம் பக்கம் பார்க்க)

## இலங்கையர் கோன் நினைவு தினம்

### சிறுகதைப்போட்டி நடத்த தீர்மானம்

காரைதீவு, செவ்வாய்

"கல்முனைத்தமிழ் எழுத்தாளர் சங்க நிருவாக சபைக் கூட்டம் மார்ச் 20-ல் நடந்த பொழுது இலங்கையர் கோன் ஞாபகார்த்த விழாவொன்றினை நடத்தத் தீர்மானம் கொண்டு வரப்பட்டது. அத்தீர்மானம் கடந்த வெள்ளிக்கிழமை நடந்த கூட்டத்தில் நிறைவேறியது. அதன்படி கல்முனைத்தமிழ் எழுத்தாளர் சங்கம் பரந்த அடிப்படையில் இலங்கையர் கோனின் முதலாவது சிரார்த்த தினமான 15-11-62 அன்று பெரிய திருவிழாவினை ஒழுங்கு செய்யவிருக்கிறது. அதை முன்னிட்டு அகில இலங்கை எழுத்தாளர்களுக்கிடையில் ஒரு சிறு கதைப்போட்டியினை நடத்தும் ஒழுங்குகளையும் மேற்கொள்ளவிருக்கிறது. சிறு கதைப் போட்டிக்குப் பரிசு 600 ரூபாய் அளிப்பதாகத் தீர்மானிக்கப்பட்டது." சங்கச் செயலாளர் இத்தகவலைத் தெரிவித்தார். நாடகாசிரியராகிய இலங்கையர் கோன் நினைவுதினத்தில் நாடகமொன்றையும், கவிதை நாடகம் ஒன்றையும் நடிக்க விருப்பதாகவும் அவர் தெரிவித்தார்.

## கி. ச. அங்கத்தவர் இருவர் ராஜினமா

யாழ்ப்பாணம், செவ்வாய்

வட்டுக்கோட்டை கிராம சபையின் 6-ம் வட்டார அங்கத்தவரான திரு. பேரம்பலமும் உடுவில் கிராமசபையின் 13-ம் வட்டார அங்கத்தவரான திரு. சு. இராமலிங்கமும் தங்கள் அங்கத்துவத்தை ராஜினமாச் செய்து விட்டனர். இந்த இருவரும் அரசாங்க பாடசாலை ஆசிரியர்களாக வந்ததே இதற்குக் காரணமாகும்.


## வரி விளம்பரம்

### உங்கள் நோய்

குணப்படுத்த உத்தரவாதம் நீரிழிவுக்கு 15 நாள் மருந்து ரூ. 15.50 தொய்வுக்கு 10 நாள் மருந்து ரூ. 12-50. பல வியாதிகளுக்கும் நற்சாட்சிப்பத்திரங்களடங்கிய கற்றலோக் Catalogue) இனும்.

வைத்தியர் பரிபூரணநந்தர்.
கைலாயபிள்ளையார்கோவிலடி,
யாழ்ப்பாணம்.

### School of Technology, Jaffna.

### 1962 – 1963 Courses.

*For City & Guilds, London Examination :*

1. Electrical Engineering Practice (Preliminary)
2. Electrical Engineering Practice (Intermediate)
3. Automobile Engineering

*For Surveyor General's Examination:*

4. Authorised Draughtsmen
5. Surveyors

*For School Certificate :*

6. Radio Service Work
7. Draughtsmanship & Building Construction

*For London University Examination :*

8. G. C. E. (Advanced Level) Economics
9. Engineering Drawing

Applications close on 25-6-62. Forms and other particulars available at School Office.

" Citadel "
Chundukuli, Jaffna.

*Director*


## 'குழந்தைகளிடம் தவறு காணப்பட்டால் திருத்துவது பெற்ரேரின் கடமை'

யாழ்ப்பாணம், புதன்

"குழந்தைகளிடத்தில் தவருன பழக்கவழக்கங்கள் காணப்பட்டால் அந்தப் பழக்கவழக்கங்கள் எத்தன்மை வாய்ந்தவை, அவற்றுக்கான மூல காரணங்கள் என்ன, அவற்றைத் திருத்துவதற்கு என்ன வழிவகைகள் கையாளப்பட வேண்டும் என்பதை நன்கு அறிந்து அவ்வழிவகைகளைக் கையாண்டு அவர்களைத் திருத்துவது பெற்ரேரின் தலையாய கடமையாகும்."

இவ்வாறு சுழிபுரம், அரசினர் விக்டோரியாக் கல்லூரி மாணவர் மன்றத்தினர் நடத்திய இலக்கியவிழாவின் முதல் நாள் நிகழ்ச்சிகளில் கலந்து கொண்டு "நீதிப் பாட்டு" என்னும் பொருள்பற்றி விரிவுரையாற்றிய டில்லி பல்கலைக் கழகத் தமிழ்ப் பேராசிரியர் திரு. சாலை. இளந்திரையன் குறிப்பிட்டார். திங்கட்கிழமை மாலை நடைபெற்ற இவ்விழாவிற்கு கல்லூரி அதிபர் திரு. ஏ. ரி. சபாரத்தினம் தலைமை வகித்தார்.

திரு. சாலை. இளந்திரையன் தொடர்ந்து பேசியதாவது:-

"நீதிகளைக்கூட அப்படியே சொல்லாது அவற்றிற்கு இனிமை பூசி, இலக்கியச்சுவை ததும்பும் கவிகளாககி நீதிப் பாட்டாக தந்திருக்கின்றனர் தமிழ்க் கவிஞர்கள். ஆடை அணிகலன்களால் ஏற்படும் அழகில் பயனில்லை; அது அழகுமில்லை வெள்ளத்தே போகாது, வெந்தணலில் வேகாது, வேந்தர்களாலும் அள்ள முடியாத செல்வம் கல்விச் செல்வமேயாகும். அள்ளி அள்ளிக் கொடுத்தாலும் குறையாது பெருகும் செல்வம் அது ஒன்றே. இறந்த பின்னும் புகழ் தரக் கூடிய ஈகை, வறியவர்களுக்கு ஈவதுதான். அப்படிப்பட்ட ஈகையில்லாதான் வாழ்க்கை வாழ்க்கையாகாது. ஒருவன் வளம் பெற்று வாழும் பொழுது சுற்றத்தவர்கள் அவனை சுற்றிக்கொள்ளக் கூடியதாக அவன் அவர்களுடன் ஒட்டிப் பழகவேண்டும். மக்கள் வாழவேண்டிய வழிவகைகளை நமக்குத் தெளிவுபடுத்துகின்றன நீதி நூல்கள்."

விழாவை ஆரம்பித்து வைத்துப் பேசிய உதவி வித்தியாதிபதி திரு. எஸ். யூ. சோமசேகரம் பின்வருமாறு குறிப்பிட்டார்:-

நமது இளைஞர்களிடையே தொழில் துறைகளில் ஈடுபட்டு உழைக்க முன்வரும் பண்பு குன்றியிருக்கின்றது; இந்தப் பண்பு வளர இலக்கியம் உதவுமா? இலக்கிய எழுத்தாளர்கள் பாலும் தேனும் போல எழுதி பண்பைவளர்த்து, சமூகத்தைச் சீர்திருத்தவேண்டும். ஒற்றுமையான நிலையை உருவாக்கி மனிதப் பண்பை வளர்ப்பதே எழுத்தாளர்களின் உயர்ந்த கடமை" "வள்ளுவரும் பெண்களும்" என்னும் பொருள் பற்றிப் பேசிய பேராசிரியை திருவாட்டி கனகசவுந்தரி இளந்திரையன் குறிப்பிட்டதாவது:-

"நல்ல பெண்களுக்குக் கணவன் செய்யும் குற்றம் குற்றமாகத் தெரியாது என்பது வள்ளுவர் கருத்து. தமது கணவனை ஆடை அணிகலன்களால் மட்டும் கவர்ந்துவிட முடியாது. உள்ளத்தால் கவருவதுதான் நிலையான கவர்ச்சியாக அமையும். கணவன் கற்புடைய கணவனுக இருப்பதற்கு அவரைத் தன்பால் தன் உயர்ந்த குணங்கள் மூலம் கவரும் தன்மை பெண்களிடத்தே இருக்க வேண்டும். கணவனின் ஆசைகளுக்கு உகந்ததாகவே மனைவியின் ஆசைகளும் இருக்குமாஞல் கணவனை ஒரு பெண் எளிதில் கவர்ந்துவிட முடியும். எனவே பெண்கள் சிறந்தவர்களாக, உயர்ந்த குணங்களுடையவர்களாக, பண்புள்ளவர்களாக விளங்கிக் கணவனை தம்பால் கவர்ந்து சிறந்த இல்வாழ்க்கையை நடத்தவேண்டும்."

## வவனிக்குளம் செல்வோருக்கு

### எம். பி. யின் வாழ்த்து

சாவகச்சேரி, புதன்

"காட்டையும் கட்டாந்தரைகளையும் பாலும் தேனும் வழிந்தோடும் பூமியாகவும், முக்கனி நல்கும் பூமியாகவும் மாற்றும் பரம்பரையைச் சேர்ந்த நீங்கள் இன்று வவனிக்குளக்காட்டைப் பொன்விளையும் பூமியாக மாற்றுவதற்குச் செல்வதைக்காணச் சந்தோஷப்படுகிறேன். உங்களை வாழ்த்தி உங்கள் முயற்சியை வாழ்த்தி வழியனுப்புவது எனது கடமை."

இவ்வாறு சாவகச்சேரிப் பிரதிநிதி திரு. வி. என். நவரத்தினம் சாவகச்சேரித் தொகுதியிலிருந்து தெரிந்தெடுக்கப்பெற்ற வவனிக்குளக் குடியேற்ற வாசிகளைத் தென்மராட்சிப் பகுதிக் காரியாதிகாரி காரியாலயத்திலிருந்து வழியனுப்பி வைக்கும் பொழுது கூறினர்.

## இன்று உங்கள் பலன்

-சோதிட ஆசான்செ. தெல்லியூர்-

சுபகிருது ஆண்டு வைகாசித் திங்கள் 11ம்நாள் வியாழக்கிழமை (24-5-62) ஹிஜ்ரி ஆண்டு 1581, துல்ஹஜ் மாதம் 19ம் பிறை.

இன்று மாலை 4-36வரை பஞ்சமி, பின்னர் சஷ்டி. மாலை 5-24வரை உத்தராடம். பின்னர் திருவோணம், மாலை 5-22 வரை சித்தயோகம், முகூர்த்த நாள். சுபகருமங்களுக்கு நலம். இராகுகாலம் 1-22முதல் 2-52 வரை. யாழ்ப்பாணம் வில்லூன்றி வீரகத்தி விநாயகர் கொடியேற்றம்.

அனுஷம், கேட்டை, மூலம், பூராடம், உத்தராடம் ஆகிய நட்சத்திரங்களுக்குப் படுபட்சி நாளாகையால் இன்று சுபகருமங்களை இவர்கள் மேற்கொள்ளுதலாகாது.

### இராசிப்பலன்

உத்தராடம்-திருவோணம்—ஊழியர் இடர், குடும்பத்தில் சுகம், மாதர் உதவி, தொழில் நன்மை.

மேடம்: வீண்வழக்கு, பணமுடை, குடும்பத்தில் கஷ்டம், செய்காரியத் தடை.

இடபம்: குடும்பசுகம், பொருள் சேர்க்கை, பழைய பாக்கிவரவு, மதிப்பு.

மிதுனம்: பிரயாணசுகம், மன ஊக்கம், நண்பர் உதவி, தொழில் நன்மை.

கடகம்: பெரியோர் ஆதரவு, குடும்பசுகம், சகோதரரால் உதவி, பணவரவு.

சிங்கம்: குடும்பசௌக்கியம், பிரயாணம், செய்காரிய தாமதம், நல்லோர் நட்பு

கன்னி: முயற்சிகளில் தாமதம், கவலை, குடும்பஒற்றுமை, பெண்கள் உதவி.

துலாம்: குடும்ப நிம்மதி, போசனசுகம், தொழில் உயர்ச்சி, பணவரவு.

விருச்சிகம்: மாதாவழிஉதவி, சுகநலம், குடும்பச்சிறப்பு, பெண்கள் உதவி.


தனு: சந்தோஷ வாழ்வு, பணவரவு, தொழிலில் ஊக்கம், சுறுசுறுப்பு.

மகரம்: மனநிம்மதி, ஊழியர் உதவி, நல்லோர் நட்பு, உழைப்பு பலிதம்.

கும்பம்: வண்டி வாகன லாபம், விருந்துகொண்டாட்டம், சபலகுணம், தொழில் மந்தநிலை.

மீனம்: நல்லோர் நட்பு, குடும்ப சுகம், மதிப்பு, சந்தோஷம்


# உங்கள் தேகத்தின் ஒவ்வொரு அசைவும் ப்ரோட்டீன் புசிக்கின்றது



உங்கள் தேகம் அசையும் ஒவ்வொருபோதும், நீங்கள் தேக உஷ்ணத்தையும் சக்தியையும் இழக்கின்றீர்கள். உங்கள் தேகம் ப்ரோட்டீனை எரித்து, தேக உஷ்ணத்தையும் சக்தியையும் உண்டுபண்ணி, பிராணி தாவர உடலமைப்புப் பொருள்களை உருவாக்கி, உடைந்துபோன உடம்பு செல்களை சரிபடுத்துகின்றது. ஆனல் உங்கள் தேகத்திற்கோ, ப்ரோட்டீன் சேமித்து வைக்கக்கூடிய சக்தி கிடையாது. எனவே, நீங்கள் தினமும் போதுமான ப்ரோட்டீன் உட்கொள்ள வேண்டும். இல்லையேல் — எப்படி ஒரு எண்ணெய் விளக்கின் திரி எண்ணெய் இன்றி தன்னைத் தானே எரித்துக்கொள்கிறதோ, அப்படியே நீங்களும் சீக்கிரத்தில் உங்கள் சொந்த உடலை எரித்து, சக்தி இழந்து, சோர்ந்து போவீர்கள்.




ப்ரான்ட்ஸ் எஸன்ஸ் ஒப் சிக்கன் சுத்தமான, கரையக்கூடிய, கொழுப்பற்ற ப்ரோட்டீனை எளிதில் ஜீரணிக்கக்கூடிய முறையில் கொண்டது. ஒன்று அல்லது இரண்டு சிறு புட்டி ப்ரான்ட்ஸ் எஸன்ஸ் ஒப் சிக்கன் தினமும் உட்கொள்ளுங்கள். விருப்பமானல், சிறிது வெந்நீருடன் கலந்து உட்கொள்ளுங்கள். டாக்டர்கள் இதை நோயாளிகளுக்கும், நோயினின்று குணமடைபவர்களுக்கும், ஜீரண சக்தி குறைந்தவர்களுக்கும் சிபார்சு செய்கின்றனர்.

ஒவ்வொரு நாளும் தேவைப்படும் ப்ரோட்டீனுக்கு, அனுதினம் ப்ரான்ட்ஸ் எஸன்ஸ் ஒப் சிக்கன் உட்கொள்ளுங்கள்.




# ப்ரான்ட்ஸ்

AY-712-3

## எஸன்ஸ் ஒப் சிக்கன்

# தாய்லாந்திற்கு ஆஸ்திரேலியா விமானப்படை அனுப்பும்

கான்பெரா, மே 23

தாய்லாந்தில் போர் பயிற்சி புரியும் தென்கிழக்காசிய ஒப்பந்தக்குழுவின் இராணுவத்தினருக்கு உதவி புரியும் முகமாக ஆஸ்திரேலியா 'ஜெட்' விமானங்களை அனுப்புமென அறிவிக்கப்பட்டுள்ளது.

மலாயாவில் பாதுகாப்பு நோக்கமாக நிறுத்தி வைக்கப்பட்டிருக்கும் பிரிட்டிஷ் சாம்ராஜ்ய படைகளில் ஆஸ்திரேலிய விமானப்படையின் ஒரு பகுதியே தாய்லாந்திற்கு அனுப்பப்படலாமென எதிர்பார்க்கப்படுகிறது.

தென்கிழக்காசிய ஒப்பந்த ஸ்தாபனத்தின் 3 அல்லது 4 நாடுகள் தாய்லாந்திற்கு படைகளை அனுப்புவதுபற்றி அண்மையில் ஒரு உடன்படிக்கைக்கு வரலாம் என தாய்லாந்து வெளிவிவகார மந்திரி தெரிவித்துள்ளார்.

அநேகமாக ஆஸ்திரேலியா, பிரிட்டன், நியூசிலாந்து, பிலிப்பைன்ஸ் ஆகிய நாடுகளே இவ்வுடன்படிக்கை பற்றி ஆராயும் நாடுகள் என நம்பப்படுகின்றன.

தாய்லாந்தில் நிலவிவரும் அபாயகரமான சூழ்நிலை நீங்குமாயின் அமெரிக்கப்படை தாய்லாந்திலிருந்து வாபஸ்பெறப்படலாமெனவும் அவர் தெரிவித்தார்.

தரைப்படை, விமானப்படை, கடற்படை ஆகியவைகளைச் சேர்ந்த அணியொன்று தாய்லாந்திற்கு அனுப்பப்படுமென நியூஸிலாந்து பிரதமர் இன்று அறிவித்தார்.

# டிகோலை கொல்ல முயற்சி

பாரிஸ், மே 22

பிரெஞ்சு ஜனாதிபதி ஜெனரல் டிகோலைக் கொலைசெய்ய முயச்சித்ததாக 16 ஓ ஏ. எஸ் பயங்கரவாதிகள் இன்று கைதுசெய்யப்பட்டனர். டிகோலைக் கொலை செய்ய முயன்றது இது இரண்டாவது தடவையாகும். முதலில் கடந்த செப்டம்பர் மாதம் அவரைக் கொலைசெய்ய முயற்சிக்கப்பட்டது.

அல்ஜீரியாவில் நேற்று 20 பேர் கொல்லப் பட்டனர். 12 பேர் காயமடைந்தனர். இதற்கிடையில் அல்ஜீரியாவிலிருந்து ஏராளமான ஐரோப்பியர்கள் வெளியேறி வருவதாய்க் கூறப்படுகிறது. கடந்த தினங்களில் மட்டும் 7000 ஐரோப்பியர்கள் வெளியேறியுள்ளனராம்.

# 'தமிழில் பேசமுடியாமைக்கு மனம் வருந்துகின்றேன்'

— மராமத்து மந்திரி

யக்கல, புதன்

"தமிழில் பேசமுடியாததையிட்டு நான் மிகவும் மனம் வருந்துகின்றேன். என்றாலும் அடுத்த மூன்றுமாதங்களுக்குப் பின்னர் தமிழ், முஸ்லிம் மக்களிடையே தமிழில் பேசுவேன்" என்று திகாரியாவில் புதிய உபதபாற்கந்தோர் ஒன்றைத் திறந்துவைத்துப்பேசிய போக்குவரத்து, மராமத்து மந்திரி திரு. பி. பி. ஜி. கலுகல்ல கூறினார்.

மந்திரி திறந்து வைத்துப் பேசியபின்னர் தொடர்ந்து நடைபெற்ற கூட்டத்திற்கு உதவி சுகாதார மந்திரி திரு ஜே. பி. ஒபயசேகரா தலைமை வகித்தார்.

திரு. கலுகல்ல மேலும்பேசியதாவது:-

"அரசாங்கத்தில் முஸ்லிம் மக்கள் நம்பிக்கை வைத்திருப்பதால் மூதூர் இடைத்தேர்தலில் அரசாங்கக் கட்சியே வெற்றிபெறும். காலஞ்சென்ற பிரதமர் 1958—59 வரை நாட்டின் பல பாகங்களிலும் 300 உபதபாற் கந்தோர்களைத் திறப்பதற்குத் திட்டமிட்டிருந்தார். ஆனல் முதலாளித்துவ சக்தியினல் அவர் தனது வேலையை செய்யமுடியாமற் போய்விட்டது. அவர் விட்டுச்சென்ற வேலையைத் தற்போதைய அரசாங்கம் செய்துவருகின்றது திகாரிய உபதபாற்கந்தோரின் தரத்தை உயர்த்துமாறு கட்டளையிட்டிருக்கின்றேன். முஸ்லிம் சமுதாயத்தினர் நன்றி மனப்பான்மை உடையவர்கள் வருங்கால வளர்ச்சிக்காக எல்லோரும் சேர்ந்து ஒத்துழைக்க வேண்டியகாலம்வந்துவிட்டது. உணவுக்காகவும், உடைக்காகவும் வெளிநாடுகளுக்குச் செல்லும் பணத்தைக் கட்டுப்படுத்த அரசாங்கம் முயற்சிசெய்துவருகின்றது. மக்களுக்கு அரசாங்கத்தின் குறைகளை எடுத்துக் கூறுவதற்கு உரிமையுண்டு"

திரு. ஒபயசேகரா பேசும்பொழுது கூறியதாவது:-

"இந்நாட்டு மக்கள் பேச்சில் வல்லவர்களாய் இருக்கிறார்களேயன்றி செய்கையில் அவற்றைக் காட்டமாட்டார்கள். சிலர் காரணம் இல்லாமல் அரசாங்க ஊழியர்களைத் தாக்குவதற்கு ஆரம்பித்துள்ளனர். முஸ்லிம்மக்களும், சிங்கள மக்களும் ஒன்றுசேர்ந்து உழைத்தால் நாடு முன்னேற்றமடையுமென்பதில் ஐயமில்லை".

# "விழா எடுப்பது மட்டும் போதாது"

தெல்லிப்பழை, புதன்

"திருவள்ளுவருக்கு விழா எடுப்பது சம்பிரதாயமாகவோ வீர வணக்கமாகவோ இருத்தல் கூடாது. வள்ளுவர் விழா நமது வாழ்க்கைக்கு வழிகாட்ட வேண்டும். அப்போது தான் நாம் விழா எடுப்பதன் பலனை அடைய முடியும். வள்ளுவன் தன்னை உலகினுக்கே தந்து வான் புகழ் கொண்ட தமிழ் மக்களாகிய நாம் வள்ளுவர் கூறிய, வாழ்ந்து காட்டிய நெறிகளையெல்லாம் பின்பற்ற வேண்டும்."

இவ்வாறு வீமன்காமம் ஆங்கில பாடசாலை மண்டபத்தில் சைவ இளைஞர் சங்க ஆதரவில் நடைபெற்ற திருவள்ளுவர்விழாவிற்குத் தலைமை வகித்துப் பேசுகையில் ஆர். கிருஷ்ணஸ்வாமி குறிப்பிட்டார். திரு. த. சங்கரப்பிள்ளை பேசும்போது குறிப்பிட்டதாவது:-

வள்ளுவர் பிறந்திராவிட்டால் தமிழன் என்றொரு இனமுண்டு என்பதையும், தமிழ் மொழியென்று ஒரு மொழியுண்டு என்பதையும் உலகோர் உணரமாட்டார்கள். திருக்குறளுடைய வள்ளுவரும்தோன்றியிராவிட்டால் தமிழ்நாடு என்று ஒரு நாடு உண்டென்று உலகோர் அறியமாட்டார்கள். படிக்கவேண்டியவைகளைப் படி, குற்றமின்றிப் படி, படிக்காவிட்டாலும் கேள். சூதாடாதே, பொய் சொல்லாதே, புலால் உண்ணுதே, களவு செய்யாதே, தீமை எண்ணுதே. நட்பு தேவை. ஆராய்ந்து கொள் என்றெல்லாம்தெளிவான கருத்துக்களைச் சொல்லக்கூடிய நூல் திருக்குறளைத் தவிர வேறு இல்லை. மனிதனை மனிதனுக வாழ வைக்க அன்றும்,இன்றும், "என்றும் வாழ்க்கைப்பாதையை வரையறுத்து விளக்கம் தரும் ஒளி விளக்கு திருக்குறள்."

செல்வி க. இ. சுப்புலட்சுமி உட்படப் பலர்பேசினர்.

---

யாழ்ப்பாணம், புதன்

கரைச்சி கிராமசபை 4-ம் வட்டார இடைத்தேர்தலுக்கான அபேட்சை மனு அடுத்த மாதம் 12-ம் திகதி யென அறிவிக்கப்பட்டுள்ளது.

# பிரான்ஸில்நெருக்கடியானநிலை

## ஜனதிபதியுடன் அரசியல் கட்சிகள் மோதலாம்

பாரிஸ், மே 23

ஜனதிபதி டிகோலுக்கும் மற்றும் பிரதான அரசியற் கட்சிகளுக்குமிடையில் மோதுதல் ஏற்படக்கூடிய இக்கட்டான நிலை ஒன்று உருவாகிக் கொண்டு வருகிறது.

தேசியசபையில் அரசாங்கத்தின் 4 ஆண்டுப் பொருளாதாரத்திட்டம் ஆராயப்படும் தருணம், இந்த மோதுதல் ஏற்படக்கூடுமென எதிர்பார்க்கப்படுகிறது.

1958-ல் தேசியச்சபை அதிகாரங்களில்அநேகமானவற்றை ஜனதிபதி தான் பொறுப்பேற்றுக் கொண்ட காலம்தொட்டு இந்த இக்கட்டான நிலை உருவாகிக் கொண்டு வந்திருக்கின்றது.

இதுவரை காலமும் அல்ஜீரியப் பிரச்சினை இந்தமோதல் ஏற்படாமல் தடைசெய்து வந்தது. இப்பொழுது அல்ஜீரியப் பிரச்சினைக்கு முடிவு ஏற்படலாம் போல் தென்படுவதால் ஜனதிபதிக்கும் பிரதான அரசியற் கட்சித் தலைவர்களுக்குமிடையில் மீண்டும் பிளவு ஏற்படக்கூடிய ஒரு நிலைதென்படுகிறது.

ஜனதிபதி அரசியல் முறைக்கு முடிவுகட்டிவிட்டு பாராளுமன்ற முறையில் அரசாங்கம் நிறுவுவதற்கான அடிப்படைக் கொள்கையிலேயே இந்த முரண்பாடு உள்ளதெனக் கூறப்படுகிறது.

# சீனவின் கட்டுப்பாடு

புதுடில்லி, செவ்வாய்

சீனவிலும், திபெத்திலுமுள்ள பாரதப் பிரதிநிதி காரியாலயங்களுக்கு சீன கடுமையான கட்டுப்பாடு விதித்திருகிறதென ஸ்ரீமதிலக்ஷ்மிமேனன் இன்று லோக சபையில் தெரிவித்தார். பீக்கிங்கில் பாரத அதிகாரிகள் 20 கிலோ மீட்டர் சுற்றளவிற் கப்பல் உத்தரவின்றி வெளியே செல்ல முடியாதபடி உத்தர விடப் பட்டிருக்கின்றனர். என்று லக்ஷ்மி மேனன் கூறினர்.

திபெத்தில் கட்டுப்பாடு மிக கடுமையாகவுள்ள தென்றும் தெரிவிக்கப் பட்டது.

ஆனல் இதே கொள்கையைப் பாரதம் சீனத் தூதுவர்களுக் கெதிராக எடுப்பது பாரதத்தின் கொள்கை அல்ல என்று வெளிநாட்டு உதவி மந்திரி தகவல் தெரிவித்தார்.

# சீன அகதிகளை ஏற்க போர்மோஸா சம்மதம்

லண்டன், மே 22

சீனவிலிருந்து காங்ஹாங்குக்கு ஓடிவரும் அகதிகள் தொகை அதிகரித்து வருவதாகக் கூறப்படுறகிது. நேற்று 5000 சீனர்கள் இவ்வாறு எல்லை கடந்து வந்தனராம். ஹாங்காங்குக் ஓடிவரும் அகதிகளைத் தாம் ஏற்றுக்கொள்ளத் தயாராய் இருப்பதாக கோமிண்டாங்சீன (போமோஸா) முன் வந்துள்ளது.

# லைசென்ஸிற்கு தமிழில் விண்ணப்பிக்கலாம்

யாழ்ப்பாணம், புதன்

வட இலங்கைத் கள்ளிறக்கும் தொழிலாளர் சங்கத்தின் சார்பில் எம். சி. சுப்பிரமணியம், எஸ். இராசையா எம். முத்தையா, ஏ. சிற்றம்பலம் ஆகியோர் கொண்ட தூதுக்குழு ஒன்று அண்மையில் வட பகுதி கலால் சுப்பிறீண்டனைப் பேட்டி கண்டது.

தமிழில் லைசென்ஸிற்கு விண்ணப்பிக்கும் சலுகை தமக்களிக்கப்பட வேண்டுமென்ற வேண்டுகோளைச் சுப்பிறீண்டன் ஏற்றுக்கொண்டார்.

கரையூர் பகுதியில் 2-ம் வட்டராத்திலுள்ள கள்ளுக் கொட்டில்களை மூடவேண்டும் என்ற ஒரு கோரிக்கையை இக்குழு எதிர்த்தது சுப்பிறீண்டன்1 வருட காலம் தவணை கொடுத்தார்.

# 'தேசிய நோக்கோடு சிலப்பதிகாரம் தோன்றியது'

## சிலப்பதிகார விழாவில் கலாநிதி பேச்சு

காரைதீவு, புதன்

"தமிழகத்தையாண்டமூன்று முடியுடை வேந்தர்களும் ஒற்றுமையின்றிப் பிளவுபட்டுவாழ்ந்துவந்தார்கள். தமிழினத்தையும், தமிழகத்தையும் ஒற்றுமைப்படுத்தும் தேசிய நோக்கோடு இளங்கோவடிகள் சிலப்பதிகாரத்தைப் பாடினர்."

மேற்கண்டவாறு காரைதீவு கண்ணகை அம்மன் கோயில் மைதானத்தில் கடந்த ஞாயிற்றுக்கிழமை இந்துசமய விருத்திச் சங்கத்தினரால் நடாத்தப்பெற்ற சிலப்பதிகார விழாவில் 'புரட்சிக் கண்ணகி' என்னும் பொருள்பற்றிப் பேசிய கலாநிதி சு. வித்தியானந்தன் குறிப்பிட்டார்.

அவர் தொடர்ந்து பேசியதாவது:-

தேசிய நோக்கத்துடன் தமிழினத்தை ஒன்றுபடுத்தும் முயற்சியில் இளங்கோவடிகள் சிலப்பதிகாரத்தில் காதைக்குக் காதை சேர, சோழ, பாண்டிய நட்பை விஸ்தரிக்கும் நோக்கில் ஒவ்வொரு சம்பவங்களையும் அமைத்துள்ளார். இளங்கோவடிகள் சேரநாட்டவர் எனினும், சேர, சோழ, பாண்டிய நாடுகள் சமதையுடன் ஒற்றுமையாய் வாழ்வதை விரும்பியவர். பாண்டியன் செங்கோல் வளைந்தது எனக்கூறி ஊழினல்தான் அது வளையவேண்டி வந்தது என ஊழ்மேல் பழியைச் சுமத்துகிருர். இதிலிருந்தும், இளங்கோவடிகள் தன்காப்பியத்தினல் ஒற்றுமையை வளரச்செய்த முயற்சிகள் தெரிகின்றதல்லவா?

கண்ணகி சோழமண்டலத்திலே பிறந்தாள். பாண்டிமண்டலத்திலே அரசனை அழித்தாள். சேரமண்டலத்திலே கோயில்கட்டப்பட்டுத் தெய்வமானுள். இந்தக் கண்ணகி தமிழிலக்கியத்திலே ஒரு புரட்சிப் பாத்திரமாக விளங்குகின்ருள். இந்தியாவில் கண்ணகி வழிபாடு குறைந்தபோதிலும் ஈழத்தில் கண்ணகி வழிபாடு இன்றும் அழியாது இருந்தே வருகிறது. அதிலும் விசேடமாக மட்டக்களப்புப் பகுதியிலே அதிகமான இடங்களில் கண்ணகி வழிபாடு உளது. மட்டக்களப்பு மக்கள் பெண்களுக்கு அதிக மதிப்பளிக்கும் பண்புடையவர்கள். இந்த மக்கள் பெண் தெய்வமாகிய கண்ணகியை வழிபடுவது சிறப்புடையது.

கயவாகு மன்னனல் இலங்கைக்குக் கொண்டுவரப்பட்ட கண்ணகிவழிபாடு, கண்டியிலிருந்து மட்டக்களப்புக்குப் பரவியிருக்கவேண்டுமெனத் தெரிகிறது. மட்டக்களப்பு மக்கள் கண்ணகிக்கு வழக்குரை, குளிர்த்தி முதலியன பாடுகிருர்கள்.

இளங்கோவின் கனவு பலிக்கவேண்டுமானல் தமிழர்களிடையேபிரிவு இருக்கக்கூடாது. விசேடமாக ஈழத்திலே உள்ள தமிழ்மக்கள் அனைவரும் சாதி, மத பேதமின்றி ஒற்றுமையாய் வாழவேண்டும்.

விழாவிற்கு மாவட்ட சுகாதார அதிபர் டாக்டர் சிவஞானரத்தினம் தலைமைதாங்கினர். கிராமச்சங்க அக்கிராசனர் திரு. இ. விஜயமூர்த்தி வரவேற்புரை நிகழ்த்தினர். பண்டிதர் வி. சி. கந்தையா 'ஈழத்துக் கண்ணகி' என்னும் பொருள்பற்றிப் பேசுகையில் புதியகோணத்தில் கண்ணகியின் வரலாற்றை ஆராய்ந்தார். திரு. குழந்தைவேல, திரு தில்லைநாதன் ஆகியோரும் சொற்பொழிவுகள் நிகழ்த்தினர். செல்வி லலிதா நவரத்தினமும், செல்வி பத்மா நவரத்தினமும் இன்னிசை விருந்தளித்தனர்.

# படகும் கள்ளக் கடத்தல் பொருள்களும் பறிமுதல்

மன்னர், செவ்வாய்

நேற்றுக் காலை சுமார் 20,000 ரூபாய் பெறுமதியான றேடியோக்கள், டேப்றெக்கோட்டர்கள்,பேனக்கள் ஆகிய பொருள்களைப் பள்ளி முனையிலிருந்து தென் இந்தியாவுக்குக் கடத்திச் செல்ல கொழும்பைச் சேர்ந்த ஆறுமுகம், பள்ளி முனையைச் சேர்ந்த செபஸ்தியான் பிகருடோ, சவேரியான் ஆகியோர் முயற்சி செய்கையில் அவர்கள் மன்னர்ப் பொலிஸ் இன்ஸ்பெக்டர் செபமாலையின் தலைமையில் சென்ற பொலிஸ்கோஷ்டியால் பிடிக்கப்பட்டனர்.

கடத்தல் பொருள்களும் கடத்தியதாகக் கருதப்பட்டவர்களும் மன்னர் சுங்க அதிகாரி முன் ஆஜர் செய்யப்பட்டு விசாரணை நடைபெற்றது.

விசாரணை முடிவில் கடத்தல் பொருள்களும் படகும் பறிமுதல் செய்யப்பட்டன. ஆறுமுகம் என்பவருக்கு 5000 ரூபாய் அபராதமும் மற்றவர்களுக்கு தலா 500 ரூபாயும் அபராதமும் விதிக்கப்பட்டது.

# புதியநிர்வாகிகள் தெரிவு

புங்குடுதீவு, புதன்

புங்குடுதீவு முத்தமிழ் மன்றப் புதிய நிர்வாகிகள் தெரிவுக்கான கூட்டம் திரு. ஐ. சிவசாமி தலைமையில் நடைபெற்றது.

ஆலோசகர்களாக அ. சோமசுந்தரம், கா. மதியாபரணம், க. செல்லத்துரை, சி. சின்னத்துரை, தீவுப்பகுதிக் காயாதிகாரி, சு. சபாரத்தினம், ஐ. சிவசாமி,க. சிவானந்தன், க. குணராஜ், ஆகியோரும் தலைவராக ப. கதிரவேலுவும், இணைச் செயலாளர்களாக க. சிவானந்தன், க. குணராஜ், ஆகியோரும் பொருளாளராக டாக்டர் சி. கணேஸும் எண் பார்வையாளராக மு. வினசித்தம்பியும் தெரிவு செய்யப்பட்டனர்.

இறுதியாக மாற்றலாகிச் செல்லும் செயலாளருக்கு மன்ற சார்பில் அவரின் சேவை நலனைப் பாராட்டும் முகமாக ஓர் பிரிவுபசாரவிழா நடாத்துவதென்றும் தீர்மானிக்கப் பட்டது.

## மணி வாக்கு

தனது கடமைகளைச் சரிவரச் செய்கின்ற பெண், உயர்ந்த அந்தஸ்தை அடைகிறாள். தான் தலைவியாய் இருந்து நடத்தும் குடும்பத்தில் அவள் அடிமையாய்க் கிடப்பதில்லை. அரசியாய் ஆட்சி செலுத்துகிறாள்.

—காந்தியடிகள்.


# ஈழநாடு

EELA NADU

EELA NADU: National Tamil Daily Post Box 49, Jaffna
Telegrams EELA NADU Jaffna
Phone 389

யாழ்ப்பாணம் சுபகிருது ஆண்டு
வைகாசி மீ 11 உ (24-5-62)


## பொருளாதாரப் பாதுகாப்பு

தென்கிழக்கு ஆசிய நாடுகளுக்கிடையே நெருங்கிய தொடர்பு ஏற்பட வேண்டுமென்ற எண்ணம் இப்போது பல ஆண்டுகளாக நிலவிவருகின்றது. ஐரோப்பிய பொதுச் சந்தையில் பிரிட்டனும்சேர்ந்து கொள்வதென முடிவுசெய்திருப்பதால் தென்கிழக்கு ஆசிய நாடுகளுக்கிடையே பொதுவான அம்சங்களில் ஒற்றுமை ஏற்படவேண்டுமென அந்நாடுகள் கருதுவது இயல்பே.

காலஞ்சென்ற பிரதமர் திரு. பண்டாரநாயக்கா தென்கிழக்கு ஆசிய நாடுகளுக்கிடையே ஒற்றுமை ஏற்படுவதைப் பெரிதும் விரும்பினார். இத்தகைய முயற்சிற்கு அவர் ஆதரவளித்து வந்ததுமன்றி இதனால் இலங்கை, இந்தியா, பாகிஸ்தான் போன்ற நாடுகளுக்கு ஏற்படக்கூடிய நன்மைகளையும் அவர் தெரிவித்தார். எனினும் உருப்படியான எவ்வித திட்டமும் உருவாகவில்லை.

இங்கிலையில் அடுத்தமாதம் இங்குநடைபெறவிருக்கும் கருத்தரங்கம் பலவிதத்திலும் வரவேற்கத்தக்கதேயாகும் இலங்கைப் பல்கலைக்கழகத்தையும் மத்திய வங்கியையும் சேர்ந்த பல பொருளாதார நிபுணர்களும், பிரபல அரசியற் கட்சியினரும் இதிற் கலந்துகொள்வார்கள் எனத் தெரிகிறது "இலங்கையும் தென் ஆசியநாடுகளின் ஒற்றுமையும், என்பது பற்றியே இக்கருத்தரங்கத்தில் விரிவான அடிப்படையில் கருத்துக்கள் பரிமாறப்படவிருக்கின்றன.

இவ்வேளையில் இலங்கை மக்களிடையில் நல்லுறவும் நல்லெண்ணமும் ஏற்படுவதற்கான வழிவகைகளையும் ஆராய்வது அவசியமாகின்றது. மொழியுரிமை, குடியுரிமை போன்ற பிரச்சினைகள் நாட்டின் ஒருமைப்பாட்டை இன்று வெகுவாகப் பாதித்திருக்கின்றன. ஒற்றுமையில்லாத ஒரு நாட்டில் எவ்வித அபிவிருத்தித் திட்டங்களையும் வெற்றிகரமாக நடாத்தமுடியாது. அரசியற் கிளர்ச்சிகளுக்குப் பொருளாதார நெருக்கடியே அடிப்படைக்காரணமெனலாம். நாட்டின் பொருளாதாரம் சீர்குலைந்து மக்களைப் பசியும் பிணியும் வாட்டுமாயின் எவ் வித அபிவிருத்தித் திட்டங்களையும் நல்லமுறையில் நிறைவேற்றுவது சாத்தியமாகாது. எனவே இக்கருத்தரங்கத்தில் பங்குபற்றும் அரசியற்கட்சிகள் இன ஒற்றுமையை வளர்ப்பதற்கான கருத்துக்களைத் தெரிவிப்பார்களானால் அவை இந்நாட்டின் முன்னேற்றத்துக்குப் பேருதவிபுரிவதாகவிருக்கும்.

ஆரம்பத்தில் இங்கு நாம் குறிப்பிட்டிருப்பதுபோல தென் ஆசிய நாடுகளின் ஒற்றுமையில்தான் அந்நாடுகளின் பொருளாதார விருத்தி தங்கியிருக்கின்றது. பிரிட்டன் ஐரோப்பிய பொதுச்சந்தையிற் சேர்ந்துவிடுவதால் ஆசியாவிலுள்ள உற்பத்தி நாடுகளுக்கு ஏற்படக்கூடிய நெருக்கடிகளுக்குப் பாதுகாப்புத் தேடுவது மிக அவசியமாகின்றது. எதிர்காலத்தில் ஏற்படக்கூடிய பொருளாதாரக் கஷ்டங்களை ஆராய்வதற்கு இம்மகாநாடு உதவியாக இருக்கவேண்டும். காமன்வெல்த் நாடுகளுக்கு வேண்டிய பாதுகாப்புக்களை ஏற்படுத்தாமல் பிரிட்டன் ஐரோப்பிய பொதுச் சந்தையிற் சேருமானால் இந்நாடுகளின் பொருளாதாரம் பெரிதும் பாதிக்கப்படும். இலங்கை, இந்தியா போன்ற நாடுகள் விவசாய உற்பத்திப் பொருள்களை பிரிட்டனுக்குப் பெருந்தொகையில் இப்போது அனுப்பிவருகின்றன. பிரிட்டன் ஐரோப்பிய பொதுச்சந்தையில் சேருமானால் இபபொருள்களை அனுப்புவதில் மிகுந்த கஷ்டங்கள் ஏற்படும். இவற்றையெல்லாம் ஆராய்ந்து ஆசியநாடுகளுக்குத் தேவையான பாதுகாப்புக்களை ஏற்படுத்துவதற்கு இக்கருத்தரங்கம் உதவுமென நம்புகின்றோம்.

# எழுத்தாளனின் தனித் தன்மை
## அதுவே படைப்பு இலக்கியத்தின் உயிர் நாடி

**அனைத்திந்திய தமிழ் எழுத்தாளர்மகாநாடு சென்னை ராஜாஜி மண்டபத்தில் நடைபெற்றது. அம்மகாநாட்டில் பேராசிரியர் அ. சீனிவாச ராகவன் ஆற்றிய தலைமைப் பேருரையின் சுருக்கம் இது.**

எழுத்தாளன் ஒருவனுடைய தனித் தன்மையே படைப்பு இலக்கியத்தின் உயிர் நாடி. இது இல்லையென்றால் இலக்கியம் என்ற நற்கலை இல்லை. சொல்லை வளைத்துத் தன் மயமாக்கும் எழுத்தாளனுடைய முடியா நெடுஞ்சாதனை, அவனுடைய உள்ளத் தனி வெளியைத்தான் அரங்காகக் கொண்டு இயங்குகிறது. இந்தச் சாதனையின் விளைவே இலக்கியம். ஆக, தனித்துவத்தின் வளர்ச்சிக்காக உலகோடு, உறவு, அது திரண்டு இலக்கியக் கலையாக எழுத்தில் வெளிவருவதற்காக தனிமை— இவ்விரு முரணான நிலைகளையும், எழுத்தாளன் வாழ்க்கையிலே காண்கிறோம். இத் தனித்துவம் சிதைந்தால் இலக்கியத்தின் தரமும் பாதிக்கப்படும் என்பதையும் உணருகிறோம்.

யதார்த்த வாதம் மனித உள்ளத்தின் பெருமையை மறந்து கசப்பையும், வெறுப்பையும், இழிவையும் மட்டுமே பேசத் தலைப்பட்டால் அது வாழ்க்கையைப்பற்றிய உண்மையாகாது உள்ளதை உள்ளபடி கூறுவதாகச் சொல்லிக்கொண்டு உள்ளத் தழுக்கையும் உடலின் குறையையும் சமுதாய அடிப்படையிலே உள்ள தவறை மட்டுமே பேசினால், பேசும்போதும் தன் உள்ளத்தோடு தொடர்பில்லாமல் உள்ளது உள்ளபடி பேசினால் அந்தப் பேச்சு வெறும் சாக்கடை ஆராய்ச்சியாகிவிடும், இலக்கியமாகாது.

அதுபோலவே அன்பு அழகு என்று மேலெழுந்தவாறு சொல்லிக்கொண்டு மனித வாழ்க்கையில் உள்ள புண்களை மூடி மறைத்தும், பிறரையும் தம்மையும் கற்பனைப் போதையிலேயே ஏமாற்றிக்கொள்வதும் கருத்துவாதமாகாது; இலக்கியமுமாகாது உள்ளதை அது வெளியுலகிலுள்ளதோ உள்ளுலகிலுள்ளதோ, ஒரு தனி மனிதன் உணர்ந்து அந்த உணர்ச்சியின்படியே பேசுவதில்தான் இலக்கியம் இந்தச் சாதனையில் உள்ளுலகிற்கு முக்கியத்துவம் கொடுக்கின்றான் யதார்த்தவாதி. புறவுலகுக்கு அழுத்தம் தருகின்றான் கருத்துவாதி. இருவரும் உள்ளதையே எழுதவேண்டும். அதை உணர்ந்தபடி எழுதவேண்டும். இந்த வரம்புக்குள் யதார்த்தவாதிக்கும் இடமுண்டு; கருத்துவாதிக்கும் இடமுண்டு. இன்றைய எழுத்தாளர்கள் பலர் இதை உணர்ந்திருக்கின்றார்கள்.

தமிழில் படைப்பிலக்கியத்திற்கு மிகச் சிறந்த எதிர்காலமுண்டு. தமிழின் தொன்மையான சிறப்புக்கு சற்றும் குறையாத ஒரு காலம் திண்ணமாக உண்டு என்று நம்புகின்றேன்.

### எழுத்தாளர் ஒற்றுமை

எழுத்தாளருக்குள்ளே அமைய வேண்டிய ஒற்றுமையைப் பற்றி பேசுகிறோம். அவ்வொற்றுமையை வரவேற்கிறோம். ஆனால் எழுத்தாளர் அனைவரும் ஒரே மாதிரியாக, ஒரே நடையில், ஒரே இலக்கியத்துறையில், ஒரே கருத்தை வெளியிடவேண்டும் என்று யாரும் சொல்லவில்லை. 'எழுத்தாளன்' என்ற சொல்லுக்கு, இலக்கியத்தைப் படைக்கிறவன் என்பதே பொருள்.

### வேறுமொழித் தொடர்பு

வெவ்வேறு மொழி இலக்கிய எழுத்தாளர்களோடு அங்கங்கே தொடர்பு கொண்டு, அதனாற் பெறுகின்ற புதிய உணர்ச்சிகள், கருத்துக்கள், இலக்கிய உத்திகள் இவற்றை தமிழ் எழுத்துலகிற்கு வழங்கும் புதுமை வள்ளல்களாகவும் அமைவார்கள். இதனால், தமிழும், அதன் இலக்கியமும் செழுமையுறும் என்பதில் ஐயமில்லை.

பொருளாதார, நலத்தைப் பேணும் சாதனமாக எழுத்தாளர் சங்கம் பணியாற்றக் கூடும்; பணியாற்ற வேண்டும். பதிப்புரிமை, பட உரிமை, முதலிய பல எழுத்துரிமைகளை எழுத்தாளனுக்கு சாதகமாக விரிவாக்குவதிலும் அவற்றை எழுத்தாளன் சார்பில் வலியுறுத்துவதிலும் எழுத்தாளர் சங்கம் செயல் படலாம்; படவும் வேண்டும். எல்லாவற்றிற்கும் மேலாக, எழுத்து சுதந்திரத்தை எச்சரிக்கையோடு பாதுகாக்கும் காவலாளனாகவும், இதனால் நேரடியாக இல்லாவிட்டாலும் விளைவின் சார்பால் மறைமுகமாக ஜனநாயகத்தின் அரண்களில் ஒன்றாகவும் எழுத்தாளர் சங்கம் இயங்கலாம்; இயங்கவும் வேண்டும். இவற்றையெல்லாம் வெற்றிகரமாக செய்வதற்கு பிரதிநிதித்துவம் வாய்ந்த தமிழ்ச் சங்கம் தேவை. அதாவது எழுத்தைப் பொறுத்தவரையில் நமது பெருமன்றம் தேவை.

### மக்களுக்காக எழுத்து

'மக்களுக்காக எழுதுகிறேன்' என்று சொல்லிக்கொண்டு அதற்காகத் தன்னுடைய தனித்துவத்தை எழுத்தாளன் இழந்துவிட்டால் அது அவன் எழுத்தை இலக்கிய நிலையிலிருந்து பிரித்து வெறும் வியாபாரமாக்கிவிடுகிறது. மக்களிலக்கியத்தின் சிறந்த பண்புகள் எளிமையும் உயிராற்றலும். அந்த இலக்கியம் பெரும்பாலோர்க்கும் பொதுவான வாழ்க்கைப் பகுதியை ஒட்டியே இயங்க முடியும். அப்படி உருவாகும் இலக்கியம் உயிர்த்துடிப்பும், நேருக்கு நேர் பேசுகிறபாங்கும், தெளிவும், மனிதப் பண்பின் பொதுவான அம்சங்களை விவரிக்கின்ற திறனும் பெற்று விளங்குகின்றது. கடந்த 30 ஆண்டுகளில் தமிழ் இலக்கியம் இப் பண்புகளையெல்லாம் பெற்றிருக்கிறது.

மக்களைக் கவரும்வகையில் எழுதுவதை நான் வரவேற்கிறேன். 'கலை கலைக்காகவே தான்' என்ற கொள்கையில் எனக்கு நம்பிக்கையில்லை. அதுபோலவே 'கலை பிறருக்காகத்தான்' என்ற கொள்கையையும் என்னால் ஏற்க முடியவில்லை. உயர்ந்த கலையில் கலைஞனுடைய தனித்துவமும் மக்கள் நெஞ்சை அள்ளும் பாங்கும் ஒரே சமயத்தில் நிறைந்திருக்க முடியும். ஆகவே, எழுத்தாளன் மக்களிடமிருந்து அவர்களது அல்லது தன்னுடைய அன்றாட வாழ்க்கையிலிருந்து ஒதுங்கி- வாழவேண்டிய அவசியமில்லை. அந்த வாழ்க்கையின் பிடிப்பிலிருந்துகொண்டே அதன் கனிசமான பகுதியை அவன் சுவைத்தால்தான் அவனால் அதைப் புரிந்துகொள்ளவோ எழுத்திலே வடித்துத் தரவோ இயலும்.

### உள்ளது உள்ளபடி

கருத்துவாதத்திற்கும், யதார்த்த வாதத்திற்கும் எத்தனையோ காலமாக நடந்து வருகின்ற ஓயாத போர், இன்றும் தமிழ் இலக்கிய உலகில் நடைபெறுகின்றது. வாழ்க்கையில் உள்ளதை உள்ளபடியே பேச வேண்டும். எழுத்திலே காட்ட வேண்டும் என்பது ஒரு கட்சி. இது யதார்த்தவாதம். மற்றொரு கட்சி "உள்ளதை உள்ளபடி சொல்வதிலே என்ன பெருமையுண்டு என்ன பயனுண்டு? சிறந்த இலட்சியங்கள் ஒளி வீசுகின்ற அற்புதமாக வாழ்க்கையைச் சித்திரிப்பதால் மட்டுமே, துயரில் உழலும் மக்களுக்கு ஆறுதல் தருகிறோம். அவர்களை லட்சியத்தை நோக்கி நடத்துகிறோம். உள்ளதை உள்ளபடியே அன்று கருத்தினால், லட்சியத்தினால், கற்பனையினால் செப்பம் செய்துதருவதே இலக்கியம்" என்று பேசுகிறது மற்றொரு கட்சி இது கருத்துவாதம் அல்லது இலட்சியவாதம்.

யதார்த்தவாதத்தை எடுத்துக்கொள்வோம். வாழ்க்கை இல்லையென்றால் இலட்சியம் இல்லை. ஆகவே வாழ்க்கையைப் பிரதிபலிப்பதுதான் இலக்கியம் என்று இலக்கிய யதார்த்த வாதிகள் பேசுவதிலே உண்மையிருக்கிறது. வாழ்க்கையைக் காண்கிறோம் நேருக்குநேர் காண்கிறோம் என்ற உணர்ச்சியைத் தருவதற்குத் தவறுகின்ற எழுத்து எப்படி வாழ்க்கையைப் பிரதிபலிக்க முடியும்? நியாயமான கேள்வி. ஆனால் இந்தக் கேள்வியில் வாழ்க்கையைப் பிரதிபலிப்பது என்ற சொற்றொடர் தான் முக்கியமானது. வாழ்க்கையைப் பிரதிபலிக்கிற கண்ணாடி எழுத்தாளனது இதயம். வாழ்க்கையின்றி இலக்கிய

(5-ம் பக்கம் பார்க்க)

## ஐயாறன் எழுதுவது

ரயிலில் எந்த வகுப்பில் செல்லலாம்? விசாகப்பெருநாள் கூட்டமாயிற்றே என்று ஒரு நண்பரைக் கேட்டேன். கூட்டம் அதிகமானதால் இரண்டாம் வகுப்பிலேயே செல்லுமாறு அவர் யோசனை கூறினார். சரி என்று யாழ்ப்பாணத்திலே இரண்டாம் வகுப்பு டிக்கெட் எடுக்கக் காத்திருக்கையில் ஓர் அப்புக்காத்து நண்பரும், ஆசிரியரும் தாங்கள் மூன்றும் வகுப்பு டிக்கெட்டே எடுக்கப்போவதாகச் சொன்னார்கள். முதல் வகுப்பில் சென்றாலும் அனுராதபுரத்தில் ஜனங்கள் வந்து மடிமீதுகூட உட்கார்ந்துவிடுவரென்றும், மூன்றும் வகுப்பே மேலென்றும் யோசனைகூறவே முடிவில் அவர்களுடன் "காந்தி வகுப்பி"லேயே சென்றேன். நல்ல பேச்சுத் துணையாயிற்று.

* * *

முதல், இரண்டாம் வகுப்புகளில் கூட்டம் மிக அதிகம். அரசாங்க சிப்பந்திகள் இலவச பாஸ் பெற்று விடுமுறை கழித்துச் செல்லுகின்றனர். நமது "ஊழியர்களாகிய அவர்கள் முதல், இரண்டாம் வகுப்பில் செல்ல, 'எஜமான்களாகிய' நாம் காசு கொடுத்துவிட்டு, மூன்றும் வகுப்பில் செல்லுவது ஒரு விபரீதமல்லவா? நாமெல்லாம் எவ்வளவு நல்ல எஜமானர்கள்!

மூன்றும் வகுப்பில் வசதியாக உட்கார இடம் கிடைத்தது. ஒரு தமிழ்ப்பெண் பேராதனை யூனிவர்ஸிட்டியில் சேர தனிமையாகச் செல்லுகிறார். படிப்பு இலவசமென்றாலும் மாதம் சுமார் 200 ரூபாய் செலவு வருமாம். மற்றொரு தமிழ்த்தாய், மலைநாட்டிலே 1957ம்வருட கலகத்தில் உயிர் தப்பிய சோகக் கதைகளைச் சொல்லிக் கொண்டே வந்தார். மீண்டும் அவர் மலைநாட்டுக்குத்தான் தனியாகச் செல்லுகிறார். பயமில்லை, உற்சாகத்துடன் காணப்பெற்றார்.

அனுராதபுரம் ஸ்டேஷன் வந்து வண்டி நின்றதும் திமு திமு என்று ஆண், பெண், குழந்தைகள் எல்லாரும் வண்டியிலே ஏறினர். பெண்கள் கூட்டமே அதிகம். நிற்கவும் இடமில்லாதபடி அவ்வளவு கூட்டம். என்றாலும் அமைதி குலையவில்லை. இரவெல்லாம் பட்டினியுடன் கண்விழித்து பஞ்சசீல விரதமிருந்த களைப்பால், ரயிலில் ஏறியதும் அவர்களில் பலரும்நின்றுகொண்டே தூங்க ஆரம்பித்தனர்! என்னுடன் வந்த தமிழ் அன்பர்கள் சிங்களத்திலே அவர்களுடன் சகோதரர் போல் பேசிக்கொண்டுவந்தனர். ரயில் குறித்த நேரத்திற்குக் குருணாக்கலை வந்து சேர்ந்துவிட்டது.

* * *

குருணாக்கலையிலிருந்து கார் டிரைவர், மலைநாட்டுத் தமிழரின் இன்றைய நிலைமையைக் கதைகதையாகச் சொன்னார். தோட்டங்களில் போட்டா போட்டியாகப் பல சங்கங்கள் உள்ளன. சமசமாஜ யூனியன் தான் பல தோட்டங்களிலே பலப்பட்டு வருகிறதாம். காங்கிரஸில் மீண்டும் பிளவு ஏற்பட்டதால், தமிழ்த் தொழிலாளரில் ஒருபகுதியினர் நம்பிக்கை இழந்து சமசமாஜ, எஸ். எல். எப். பி., கம்யூனிஸ்ட் முதலிய யூனியனில் சேர்ந்து வருவதாகச் சொன்னார்.

தோட்டங்களில் வேலையில்லாக் கஷ்டத்தைப்பற்றிக் கேட்டேன். பல தோட்டங்களில் வேலையில்லாமல், பல குடும்பங்கள் வெளியேறி, ஒண்ட இடமுமின்றி உண்ண உணவுமின்றித் தெருவிலே பிச்சைக்காரர்போல அலைவதாகக் கூறினார். அவர்களுக்கு உதவி செய்ய யாருமில்லையாம்.

இந்நாட்டுக்காக உழைத்து சண்யமாக வாழ்ந்த அவர்கள் பட்டினி கிடந்து அனாதைக

(5-ம் பக்கம் பார்க்க)

# ஷேக்ஸ்பியர் ஒரு வாழும் புலவர்

## பிரிட்டிஷ் கவுன்சில் கலாச்சார ஆலோசகர் யாழ்ப்பாணத்தில் உரை

யாழ்ப்பாணம், புதன்

பிரிட்டிஷ் கவுன்சில் கலாச்சார ஆலோசகர் திரு. பி. கே. பிறடி நேற்றைய தினம் யாழ்ப்பாணம் மத்திய கல்லூரியில் "சேஷக்பியரின் சில பகுதிகள்" என்னும் பொருள் பற்றிச் சொற்பொழிவாற்றினர். யாழ்ப்பாண பொது நூல் நிலையத்தாரின் ஆதரவில் நடைபெற்ற இக்கூட்டத்திற்கு யாழ்ப்பாண மத்திய கல்லூரி அதிபர் திரு. ஏ. ஈ. தம்பர் தலைமை தாங்கினர். "ஷேக்ஸ்பியர் ஒரு வாழும் புலவர், அவர் ஒரு கவிஞன், நாடகாசிரியன், எக்காலத்திற்குமுரிய ஒரு புலவர் அவர்" என்று பிறடி தனது சொற்பொழிவின்போது கூறினர்.

ஷேக்ஸ்பியரின் கவித்துவத்தை விளக்குமுகமாகச் சில பகுதிகளை அவர் வாசித்துக் காட்டினர்.

நன்றி தெரிவித்த யாழ்ப்பாண பிஷப் வண. குலேந்திரன் பேசுகையில் "ஆங்கிலேயருக்கு எப்படி லத்தீனும் கிரீக்கும் இருந்ததோ அதேபோல ஆங்கிலம் இலங்கையர்க்கு இருந்திருக்கின்றதென்றூர். ஆங்கிலத்தின் தரத்தை உயர்த்துவதற்கு பிரிட்டிஷ கவுன்சிலும் கல்வி ஸ்தாபனங்களும் கவனம் செலுத்தவேண்டும் என்று பிஷப் தனது பேச்சில் சுட்டிக்காட்டினர்.

வெளிநாட்டுக் கலாச்சாரம் அறிய இலங்கை மாணவனுக்கு ஆங்கில அறிவு அவசியம் என்றும் அவர் தெரிவித்தார்.

பேச்சின்பின் ஒரு படமும் திரையிடப்பட்டது.

## எழுத்தாளனின்...

(4ம் பக்கத் தொடர்ச்சி)

மில்லை. அதுபோலவே அதைப் பிரதிபலிக்கும் எழுத்தாளனுடைய இதயம் இல்லையென்ருலும் இலக்கியமில்லை. தமிழைப் பொறுத்தவரையில் யதார்த்தவாதிகள் உள்ளதை உள்ளபடி என்ற தம்முடைய வாதத்திற்கு எடுத்துக்காட்டாக சங்க இலக்கியத்தைக் குறிப்பிடுகிறார்கள். சங்க இலக்கியப் புலவன் புறஎகலப் பொருட்களை, நிகழ்ச்சிகளை மிக நுட்பமாகவும் அருமையாகவும் நேருக்குநேர், நாம் காண்பதுபோலவும் சித்திரிக்கிருன். ஆனல், அவன் ஒரு கவிஞன்; இலக்கியகர்த்தா. அவன் கண்ட வாழ்க்கை அவன் நெஞ்சிலே தோய்ந்துதான், அந்த நெஞ்ச ஈரத்தோடுதான் நம்மை அடைகிறது; அதனல்தான் இலக்கியமாகிறது என்பதை நாம் மறக்கக்கூடாது.

## ஐயாறன்

(4-ம் பக்கத் தொடர்ச்சி)

ளாகத்தெருவில் அலைந்து சாக வேண்டியதுதான? அன்பு, மனித உரிமை இவற்றைப்பற்றிப் பேசுகிறேம். ஆனல் இந்த மலைநாட்டு அனதைகளைப்பற்றி கேள்வி முறையில்லை. மலாயாவில் தொழிலாளரே தங்கள் சம்பளத்தில் மதாமாதம் சேமித்துப் பல தோட்டங்களைச் சொந்தத்திலே கூட்டுறவு முறையில் வாங்கியுள்ளனர். ஆனல் இங்கோ ஒன்றுமில்லை. பிரஜா உரிமை, வாக்குரிமை, மனிதஉரிமை இவற்றை இழந்து நிற்பதுதான் கண்டபலன்!

* * *

35 வருடகாலம் இலங்கையில் வாழ்ந்து உழைத்த, செல்லப்பாபிள்ளைக்கு கண்டியிலே ஒரு பிரியாவிடை நடத்தினர். கண்டி மேயர் சேனநாயக்கா தலைமை வகித்துப் பேசுகையில் மலைநாட்டுத் தமிழர் தங்களது உறவினர் போன்றவரென்றூர். செல்லப்பாபிள்ளை இந்திய விடுதலைப் போராட்டத்தில் 18 மாத சிறைத்தண்டனை அனுபவித்த ஆகஸ்ட் தியாகி. இங்கு விஸா காலந்துக்கு அதிகமாக இருந்துவிட்டதாகக் கூறி, கைதுசெய்து கும்பனித்தெரு முகாமில் 10 நாள் வைத்து விடுதலை செய்தனர். நேரு—கொத்தலாவலை ஒப்பந்தத்துக்குப்பின் இந்தியராகப் பதிவு செய்து கட்டணமின்றி விஸா எடுத்தவரையும் அங்கு பிடித்து அடைத்திருக்கின்றனராம்!

கண்டியிலே பல வருடகாலம் ஓட்டல் வைத்து, நல்ல சாப்பாடு போட்டு சேவை செய்து வந்த ஓர் ஐயரையும் விஸா முடிந்து வசித்த காரணம் சொல்லி, கைவிலங்கிட்டு தெருவிலே அழைத்துச்சென்று சிறைப்படுத்தி, இந்தியாவுக்குத் திருப்பி அனுப்பிய கண்ருவிக் கதைகளை ஒரு தாய் சொன்னர். கேட்கவே சகிக்கவில்லை. விலங்கு மாட்ட வேண்டியது அவசிம்தான? ஏனே இந்தக் கொடுமை?

* * *

துன்பமின்றித் துயரின்றி

## சங்கானை மேற்கு சனசமூகநிலையம்

யாழ்ப்பாணம், புதன்

சங்கானை மேற்கு சனசமூக நிலையத்தின் வருடாந்த பொதுக் கூட்டம் இம்மாதம் 6-ம் திகதி திரு. சி. ஆதிமூர்த்தியின் தலைமையில் நடைபெற்றது. சென்ற ஆண்டுக் கூட்ட அறிக்கை வாசிக்கப்பட்டு அங்கீகரிக்கப் பட்டது. இவ்வருடத்துக்கான புதிய செயற்குழுவும் தேர்ந்தெடுக்கப்பட்டது. திரு. சி. ஆதிமூர்த்தி தலைவராகவும் திரு. மு. ஜெயபாலசிங்கம் தனதிகாரியாகவும் திரு. மு. ஆறுமுகம் காரியதரிசியாகவும் தேர்ந்தெடுக்கப்பட்டனர்.

## விநாயகர் உற்சவம்

யாழ்ப்பாணம், வியாழன்

யாழ்ப்பாணம் மேற்கு, வில்லூன்றி வீரகத்தி விநாயகர் உற்சவம் இம்மாதம் 24-ந் திகதி தொடக்கம் ஜூன் 1-ந் திகதி வரை நடைபெறவிருக்கிறது. 1-ந் திகதி வெள்ளிக்கிழமை தேர்த்திருவிழாவும், சனிக்கிழமை தீர்த்தத் திருவிழாவும் நடைபெறும்.

# 'மனிதாபிமானம்இல்லாததால் மரணம் ஏற்பட்டது'

யாழ்ப்பாணம், புதன்

"அப்போதிக்கரி மனிதாபிமானமுடையவராகவும், ஆபத்திதவியவர்போல் வேஷம் போட்டமற்றவர் உண்மையிலே உதவி செய்பவராகவும் இருந்திருந்தால் இந்த அகால மரணம் தவிர்க்கப்பட்டிருக்கலாம்." இவ்வாறு மோட்டார் 'வான்' ஒன்றினல் மோதுண்டு மாண்ட சின்னப்பொடி ஆறுமுகத்தின் மரண விசாரணையின் போது திடீர் மரண விசாரணை அதிகாரி திரு. கனகரத்தினம் கூறினர்.

இறந்தவரின் மருமகனை நன்னித்தம்பி காராளசிங்கம் தெரிவித்ததாவது:

"இரவு 2-மணிபோல் எனது மாமனர் றக்கா ரோட்டில் அறிவு கெட்ட நிலையில் கிடப்பதாக மனோகராத் தியேட்டர் மனேஜர் முருகையா அறிவித்தார். நான் சென்று மாமனரை ஆஸ்பத்திரியில் அனுமதித்தேன். அடுத்த நாள் காலை 11-மணிக்கு அவர் உயிர் துறந்தார். வழக்கமாக அவர் நல்லூர்க் கோவிலுக்குப் போவதுண்டு. குறிப்பிட்ட தினமன்றும் அங்கேயே போயிருந்தார்" என்றூர்.

மாமனரை ஆஸ்பத்திரியில் சேர்த்த பின்னர், அவர் காட்டுவாடி சோமசுந்தரம் என்பவர் செலுத்திய வானினல் அடிக்கப்பட்டு, பின்னர் சாரதியினல் ஆஸ்பத்திரிக்குக் கொண்டு செல்லப்பட்டார் என்றும் ஆஸ்பத்திரியிலே கடமையாற்றிய அப்போதிக்கரி பொலிஸுக்கு அறிவித்து விட்டுவரும்படி கூறவே குற்றவாளி திரும்பிப் போய்விட்டதாகத் தான அறிந்ததாக நன்னித்தம்பி காராளசிங்கம் தொடர்ந்து சாட்சியமளிக்கையில் தெரிவித்தார்.

முருகேசு தம்பிரத்தினம் என்பவரும் சாட்சியமளித்தார்.

வைத்திய அதிகாரி டாக்டர் வைத்திலிங்கம் இறந்தவருக்கு காயங்கள் காலிலும் தலையிலும் காணப்பட்டன என்றும் அவை அபாயகரமானதல்ல எனவும் தெரிவித்தார்.

மரண விசாரணை அதிகாரி அப்போதிக்கரியின் அறிவீனத்தையும் இரக்கமின்மையையும் மிகவும் கடுமையாகக் கண்டித்து, உடனே சிகிச்சை அளித்திருந்தால் மரணம் தவிர்க்கப்பட்டிருக்கலாமென்றும் கூறினர்.

## நாவலர் பெருமை

### சாலை இளந்திரையன் பேச்சு

யாழ்ப்பாணம், புதன்

'நாம் தமிழ்நாட்டில் இருந்தபோதிலும் நாவலர், விபுலானந்தர் போன்ற பெரியார்களின் செயல்கள் ஈழநாட்டின் பெருமைகளை என்றும் எமக்கு நினைவூட்டிக்கொண்டிருக்கின்றன.

இவ்வாறு டில்லி பல்கலைக் கழகப் பேராசான் திரு. சாலை இளந்திரையன் இன்று வண்ணை நாவலர் வித்தியாசாலையில் மாணவர் கூட்டத்தில் பேசுகையில் குறிப்பிட்டார். அவர் மேலும் பேசுகையில் குறிப்பிட்டதாவது:

சைவத் தமிழ் நூல்களை எளிய வசனநடையில் ஆக்கி அவற்றைத் தமிழ் நாடெங்கும் பரவச்செய்த பெருமை நாவலருக்கே உரியதாகும். அவர் செய்துவைத்த பணிகளினல் இன்றும் அவர் எம்முன் காட்சியளித்துக் கொண்டேயிருக்கிருர். இதனல் ஈழநாட்டுக்கே ஒரு பெருமையைத் தேடித்தந்துள்ளார். அவர் நிழலில் நின்று செழிப்புடன வாழவேண்டும்."

இக் கூட்டத்திற்குத் தலைமையாசிரியர் பண்டிதர் இ. திருநாவுக்கரசு.தலைமை வகித்தார். ஆசிரியர் க. வை. ஆர். சர்மா நன்றி கூறினர்.

திருமதி கனகசவுந்தரி இளந்திரையனும் சமுகமளித்திந்தார். பாடசாலையையும் அவர்கள் பார்வையிட்டனர். நாவலர் சரித்திரம் அவர்களுக்கு அன்பளிப்பாகக் கொடுக்கப்பட்டது.

யென்றுநீர்
இன்பம் வேண்டி இராப்பக
லேத்துமின்
என்பொ னீசனிறைவனென்
றுள்குவார்க்
கன்ப னையிடு மானைக்கா
வண்ணலே.
— திருநாவுக்கரசர்

வியப்போல்ட்வில்லி, மே 23

கட்டாங்கா பிரிவினையை முடிவுக்குக் கொண்டுவரும் நோக்கமாக கட்டாங்கா அதிபர் ஷோம்பேயும் காங்கோ பிரதமர் அடௌலாவும் நேற்று சந்தித்துப் பேசினர். ஐ. நா. பிரதிநிதியும் இதில் கலந்து கொண்டார்.

# நஞ்சு உண்டு டாக்டர் தற்கொலை

கொழும்பு, புதன்

முன்னைநாள் கண், மூக்கு, காது வைத்திய நிபுணர் டாக்டர் எச். சி. பி. குணவர்தன "சியனைட்" திராவகம் அருந்தி தற்கொலை புரிந்தார்.

இவ்விபரம் மரண பரிசோதனையின்போது,மரணவிசாரணை அதிகாரிதிரு. ஜே.என்.சி.திருச்செல்வத்தினல் வெளியிடப்பட்டது.

மரணவிசாரணையின் போது திருமதி குணவர்த்தன தெரிவித்ததாவது:—

எனது கணவர் 10வருடங்களுக்கு முன்பு ஓய்வுபெற்று ஒரு கம்பனியில் நிர்வாக அதிபராக 4 வருடங்கள் கடமை கடமையாற்றினர். பின்னர் சொந்தமாக அவர் ஓர் கம்பனியைத் தொடங்கி நடாத்தினர். இக் கம்பெனிக்கு இலங்கை கடற்படையினர் பல லட்ச ருபாய்கள் கொடுக்க வேண்டியிருக்கிறது. இதனல் கம்பனியிலே பொருளாதார பிரச்சினைகள் ஏற்பட்டன. இதனல் எனது கணவர் மனமுடைந்து காணப்பட்டார்.

"ஞாயிறு இரவு அவரதுபல்லில் இருந்து இரத்தம்வடிந்ததினல் டாக்டர் மிஸஸோவை அழைத்துக் காண்பித்தேன். திங்கள் அதிகாலை 1-40 மணியளவில் எனது கணவரின் இருமல சத்தம் கேட்டு நான் எழுந்தேன். அவர் அப்பொழுது அவஸ்தைப்பட்டுகொண்டிருக்கவே என் மகனுக்கு அறிவித்தேன். அவர் டாக்டர் மிஸ்ஸோவுடன் வந்து எனது கணவனைப் பரிசோதித்தபொழுது என்கணவர் இறந்துபோயிருக்கக்காணப்பட்டார்.

டாக்டர் டபிள்யூ. டி. எல். பெர்ணண்டோ ஜே. எம். ஓ. 'சியனைட்' விஷத்தினல் இம் மரணம் சம்பவித்ததெனக்கூறினர்.

டாக்டர் சி. ஜே. என். மிஸ்ஸோவும் சாட்சியமளித்தார்.

## பெற்றோரின் அவசரத்தால் சிசு மரணம்

கொழும்பு, புதன்

காலை 6மணிக்குகுழந்தைகள் வைத்தியசாலையில் சேர்ந்த ஒரு ஐந்துமாதச் சிசுவை டாக்டரின் புத்திமதிக்கு மாருக மாலை ஆறுமணிக்கு அங்கிருந்து எடுத்துச் சென்றனர். அதன்விளைவாக அன்று இரவு பத்து மணிக்கே அக் குழந்தை மரணமடைந்தது.

மரண விசாரணை அதிகாரி ஜே. என். சி. திருச்செல்வம் மரணவிசாரணை நடத்தினர்.

அப்போது டாக்டர் ஏ.எம். எம். சமீர் அக் குழந்தையை தான இரவு பத்து மணிக்கு திரும்பவும் வைத்தியசாலையில் பரிசோதித்தபோது இறந்துவிட்டதாகக் கண்டதாகக் கூறினர். சனிஜுரம் காரணமாகக் குழந்தை மரணமானதென்றும் கூறினர்.

திரு. திருச்செல்வம் தீர்ப்பளிக்கையில் இயற்கையாகவே மரணம் சம்பவித்ததென்றூர்.

## கல்லூரி ஆசிரியர் திடீர் மரணம்

நாவலப்பிட்டி, செவ்வாய்

நாவலப்பிட்டி கதிரேசன் கல்லூரி ஆசிரியர் திரு. சி. அருளம்பலம (வயது 50) இங்கு திடீர் மரணமானூர்.

கடந்த வியாழக்கிழமை பாடசாலையில் கடமையாற்றிய இவர் சனிக்கிழமை நாவலப்பிட்டி ஆஸ்பத்திரியில் அனுமதிக்கப்பட்டு ஞாயிற்றுக்கிழமை மரணமானூர். மானிப்பாய் சுதுமலையைச் சேர்ந்த இவருக்கு மனைவியும் மூன்று புத்திரிகளும் உள்ளனர். இவரின் அந்திமக் கிரியைகள் நாவலப்பிட்டியில் நடைபெற்றபோது பெருந்தொகையான மக்கள் இறுதி அஞ்சலிசெலுத்தினர் இவருக்கு அனுதாபம் தெரிவிக்க கல்லூரி ஒரு நாள் மூடப்பட்டது. கடந்த 25 ஆண்டு கதிரேசன் கல்லூரியில் சேவை செய்த இவர் சில காலம் உதவி அதிபராகவும் தற்காலிக அதிபராகவும் கடமையாற்றியுள்ளார்.

## கொழும்பில் வள்ளுவர் விழா கொண்டாட்டங்கள்

கொழும்பு, புதன்

வட-கொழும்பு இந்து பரிபாலன சங்கம் ஸ்ரீமத் அருணைகலேஸ்வர கோவிலில் கடந்த ஞாயிறு அன்று திருவள்ளுவர் நினைவு விழாக்கொண்டாடியது. உயர் நீதிமன்ற ஆணையாளர் திரு. ஸ்ரீஸ்கந்தராஜா விழாவை ஆரம்பித்து வைத்தார்.

திருமதி பொன் ஸ்ரீஸ்கந்தராஜா, திருமதி நேசமலர் வேலாயுதபிள்ளை ஆசிரியர்கள் மா. கந்தசாமி, ஆ. சின்னையா முதலியோரின் சொற்பொழிவுகள் இடம் பெற்றன.

**கம்பளையில்**

கம்பளை கடுகண்ணவைவீதி 'ஈழமணி' அலுவலகத்தில் திரு. தமிழ்ப்பித்தன் தலைமையில் ஞாயிற்றுக்கிழமையன்று வள்ளுவர்விழாக் கொண்டாடப்பட்டது.

"திருவள்ளுவரின் படத்தை விடெல்லாம் வைத்து காலமெல்லாம் விழாக் கொண்டாடுவது போல குறளையும் நாளெல்லாம் கற்று வள்ளுவன் வழி நடக்க முயல வேண்டும். இதை விட்டு தீபாவளி பண்டிகை கொண்டாடுவது போல் கல கலவென்று கொண்டாடுவதில் எப்பயனுமில்லை" எனத் தலைமை வகித்துப் பேசுகையில்'ஈழமணி' ஆசிரியர் தமிழ்ப்பித்தன் கூறினர்.

## இ. போ. ச. விற்று வருமானம் குறைவு

கொழும்பு, புதன்

இவ் வருடத்தின் முதற் பகுதியில் இ. போ. சபையின் 17 நிலையப்பகுதிகளில் ஒன்ருவது எதிர்பார்த்த வருமானத்தைப்பெறத் தவறிவிட்டது.

வருமானம்பற்றிய இந்நிலை முற்றிலும் திருப்திகரமானதில்லையென பிரதம மனேஜர் எல்லாடிப்போ மனேஜர்களுக்கும் தெரிவித்துள்ளார்.

51 டிப்போக்களில் மட்டக்களப்பு, ஹட்டன், பொரளை ஆகிய மூன்று டிப்போக்கள் மட்டுமே ஜனவரி தொடங்கி மார்ச்சுடன் முடிந்த மூன்று மாதங்களில், வரும்படி கூடுதலாகப் பெற்றுள்ளன எனவும் பிரதம மனேஜர் அறிவித்துள்ளார்.

பாடசாலைகள் இம்முறை நேரகாலத்துடன் மூடப்பட்டதால் வருமானம் கொழும்பு நகரப் பகுதியில் குறைந்துள்ளது எனவும மனேஜர் சுட்டிக் காட்டியிருக்கிருர்.

## நேபாளத்தில் 5 கலகக்காரர் கொலை

காட்மாண்டு, மே 23

நேபாளத்தில் இந்திய எல்லைக்குச் சமீபத்தில் கலகக்காரர்களுக்கும் அரசாங்கத்துருப்பினருக்குமிடையில் நடைபெற்ற ஒரு சண்டையில் ஐந்து கலகக்காரர் கொல்லப்பட்டதாகவும் பலர் காயமடைந்ததாகவும் நேபாள உள்விவகார அமைச்சு வெளியிட்ட ஒரு அறிக்கை கூறுகறது.

கலகக்காரர் இந்திய ஆயுதங்கள் வைத்திருந்ததாகவும் அந்த அறிக்கை கூறுகிறது.



# பத்மினி படம் தயாரிக்கிறர்

## மகன் பெயரில் கம்பெனி

பிரபல நடிகை பத்மினி சொந்தத்தில் திரைப்படக் கம்பனியொன்றை ஆரம்பித்துள்ளார்

தமிழ்த்திரையுலகில் தனக்கெனத் தனியான ஒரு இடத்தைப் பிடித்துக் கொண்ட நாட்டிய நடிகை பத்மினி டாக்டர் ராமச்சந்திரன் என்பவரைத் திருமணம் செய்து ஒரு குழந்தைக்கும் [illegible]யாகிவிட்டாரென்பது சினிமா ரசிகர்கள் அறிந்ததே.

தனது மகனின் பெயரைச் கொண்ட 'பிரேம்ஆனந்த் பிக்சர்ஸ்' என்ற திரைப்படக் கம்பனியை பத்மினி ஆரம்பித்துள்ளார்.

இந்தக் கம்பனியின் முதல் தயாரிப்பு ஒரு மலையாளப்படமாக இருக்குமென்று தெரிகிறது.

# பத்மினி - எஸ். எஸ். ஆர். நடிக்கும் "காட்டு ரோஜா"

திருமணத்துக்குப் பின் மீண்டும் திரைப்படத்தில் நடிக்கவிருக்கும் பத்மினி மர்டர்ன் தியேட்டர்ஸ் தயாரிக்கும் 'காட்டு ரோஜா' என்ற படத்தில் கதாநாயகியாக நடிக்கவிருக்கிறர். எஸ். எஸ். ராஜேந்திரன் கதாநாயகனுக நடிக்கவிருக்கிறர்.

எஸ். வி. ரங்கராவ், கே. ஏ. தங்கவேலு, புஷ்பலதா, எம். வி. ராஜம்மா, மனோரமா ஆகியோரும் நடிக்கும் இப்படத்தின் கதைவசனங்களை சோலைமலை எழுதுகிறர்.

—

## 'வள்ளலார்' படம்

### எம். ஜி. ஆர். டைரக்ட் செய்வார்

ஜோதிர்மலிங்க சுவாமிகள் பாகத்தை ஏற்று 'வள்ளலார்' படத்தில் நடிக்கவிருக்கும் புரட்சிநடிகர் எம். ஜி. ராமச்சந்திரனே அந்தப் படத்தை டைரக்ட் செய்யவிருக்கிறர்.

'பழனிதுரை பிக்சர்சாரின்' முதல் தயாரிப்பான 'வள்ளலாரின்' மூலக்கதையை திருமுருககிருபானந்தவாரியார் எழுதியுள்ளார்.

பெருந்தொகையான செலவில் தயாரிக்கப்படும் இப்படத்தில் எம். ஆர். ராதா புதிய வேடத்தில் நடிக்கவிருக்கிறர்.

—

## எட்டுப் புதுமுகங்கள் சாந்தாராம் படத்தில்

டைரக்டர் சாந்தாராம் இப்பொழுது தயாரித்துவரும் 'ஸெகரா' என்ற வர்ணப்படத்தில சந்தியா பிரதான பாகத்தில் நடிக்கிறர். இவருடன் நான்கு யுவதிகளும் நான்கு இளைஞர்களும் பிரதானபாகங்களில் நடிப்பார்கள். புதிய இசையமைப்பாளர் இப்படத்துக்கு இசையமைப்பார்.

## தியேட்டர்கள் நன்கு கவனிக்கப்படவேண்டும்

### சினிமா ரசிகர்சங்கத்தின் தீர்மானம்

யாழ்ப்பாணம், புதன் 'யாழ்ப்பாண மாநகரசபை சினிமா தியேட்டர்கள் சம்பந்தமாகக் கொண்டுவந்த சட்டங்கள் நடைமுறைக்குக் கொண்டுவரப்படாதிருக்கின்றன. இது விஷயத்தில் நகரசபையினர் அக்கறைகாட்டி ஆவன செய்ய வேண்டும். இல்லையெனில் வெப்பம் மிகுதியாகவுள்ள யாழ்ப்பாணத் தியேட்டர்கள் தொற்று நோய் பரப்பும் இடமாக மாறிவிடும்.'

மேற்கண்ட தீர்மானம் இனுவில் தமிழ் சினிமா ரசிகர் சங்கத்தின் மாதாந்தக் கூட்டத்தில் நிறைவேற்றப்பெற்றது.

இத்தீர்மானத்தின் பிரதிகளை யாழ். மாநகரசபைக்கும், சுகாதார இலாகா டைரக்டருக்கும் அனுப்பி வைப்பதென முடிவு செய்யப்பட்டது.

—

## 'தட்ச யகஞ்ப'

ஸ்ரீராஜராஜேஸ்வரி பிக்சர் சாரின் 'தட்சயகஞம்' படம் ஜூன் முதல் திகதி திரைக்கு வரவிருக்கிறது.

'இலங்கேஸ்வரன்' மனேகர் பரமசிவனுகவும், தேவிகா பார்வதியாகவும், ரங்கராவ் தட்சனுகவும், நரசிம்மபாரதி நாரதராகவும், எஸ். ஜி. ஈஸ்வர் திருமாலாகவும், சூர்யகுமார் சந்திரனுகவும், குசலகுமாரி ரோகிணியாகவும் நடிக்கும் இந்தப் புராணப்படத்தில் கண்ணம்பா, அம்பிகா, சுகுமாரி, எம். எஸ். எஸ். பாக்கியம் ஆகியோரும் நடிக்கின்றனர்.

உதயகுமார் வசனங்களை எழுதியுள்ள இப் படத்தை தயாரிப்பாளர் நாகபூஷணமே டைரக்ட் செய்கிறர்.

# கலை அரங்கம்

## கண்ணிலே நீர் எதற்கு?

### காலமெல்லாம் அழுவதற்கு!

### 'பொலிஸ்காரன் மகளுக்கு' கண்ணதாசன் பாட்டு

'கண்ணிலே நீர் எதற்கு?
காலமெல்லாம் அழுதற்கு!
நெஞ்சிலே நினைவு எதற்கு?
வஞ்சகரை மறைப்பதற்கு?

என்ற அடிகள் கொண்ட பாட்டு 'சித்ரகலா' திரைப்படக் கம்பனியார் தயாரித்து வரும் 'பொலிஸ்காரன் மகள்' என்ற படத்திற்காகப் பதிவு செய்யப்பட்டது.

கவிஞர் கண்ணதாசன் எழுதிய இப்பாட்டை சீர்காழி கோவிந்தராஜனும் பி. சுசீலாவும் பாடுகின்றனர். விசுவநாதன்-இராமமூர்த்தி இசையமைத்துள்ளனர்.

இப்பாட்டை அண்ணனும் தங்கையுமான முத்துராமனும் விஜயகுமாரியும் பாடுவது போல் படமாக்கப்பட்டது.

எஸ். வி. சகஸ்ரநாமம், சந்திரபாபு, முத்துராமன் நடிக்கும் இப்படத்தின் திரைக்கதைவசனம் டைரக்ஷன் பொறுப்புக்களை ஸ்ரீதர் ஏற்றுள்ளார்.

## பண்டரியின் சொந்தப் படம்

நடிகை பண்டரிபாய் 'புண்யவதி' என்னும் பெயரில் கன்னடப் படமொன்றைத் தயாரிக்கிறர்.

பண்டரியாய், மைனுவதி, ராஜ்குமார் ஆகியோர் நடிக்கும் இப்படத்தை எச். எல். என். சின்ஹா டைரக்ட் செய்கிறர்.

—

## ராகவன் தயாரிக்கும் 'அழகுநிலா'

ராகவன் புரடக்ஷன்ஸார் தயாரிக்கும் படத்துக்கு 'அழகுநிலா' என்று பெயரிடப்பட்டுள்ளது. கல்யாண்குமார், முத்துராமன், டி. கே. ராமச்சந்திரன், மாலினி, தங்கவேலு வசந்தி, பாக்கியம் ஆகியோர் நடிக்கும் இப்படத்தை ராகவனே டைரக்ட் செய்கிறர்.

## 'தெய்வத்துள் தெய்வம்'

கதைவசன கர்த்தா கே. எஸ். கோபாலகிருஷ்ணன் 'சாரதா' படத்தின் மூலம் டைரக்டராகி இப்பொழுது தயாரிப்பாளராகி 'தெய்வத்துள் தெய்வம்' என்ற ஒரு படத்தைத் தயாரிக்கிறர்.

இப்படத்திற்காக பாரதியாரின்

"கண்ணன் மனநிலையை
தங்கமே தங்கம்
கண்டுவர வேண்டுமடி
தங்கமே தங்கம்"

என்ற பாட்டு சமீபத்தில் பரணி ஸ்டுடியோவில் பதிவு செய்யப்பட்டது.

ஜானகி பாடும் இப்பாட்டுக்கு ஜி. ராமனுதன் இசையமைத்துள்ளார்.

எஸ். எஸ். ராஜேந்திரன், எஸ். வி. ரங்கராவ், எஸ். பாலச்சந்தர், என். என். கண்ணப்பா, மனேரமாநாகேஷ் ஆகியோரும் இதில் நடிக்கின்றனர்.

—

## தயாரிப்பாளர் டைரக்டராகிறர்

படிக்காத மேதையைத் தயாரித்து வெளியிட்ட பாலா மூவிஸ் அதிபர் என். கிருஷ்ணசாமி தாம் அடுத்துத்தயாரிக்கும் படத்தைத் தாமேடைரக்ட் செய்யவிருக்கிறர்!

எஸ். எஸ். ராஜேந்திரன், விஜயகுமாரி ஜோடி முக்கிய பாகத்தில் நடிக்கும் இப்படம் மிகக் குறுகிய காலத்தில் தயாரிக்கப்படுமாம்.

நாடகம்

# பாசத்தின் எதிரொலி

விமர்னசம்

தங்கையின் நல்வாழ்வுக்காக அல்லும் பகலும் உழைத்து அவள் நல்வாழ்வைக் காண முடியாது பைத்தியக்காரனுகின்றுன் ஒரு அண்ணன். தன் அண்ணனைத் திருத்தும் முயற்சியில் ஈடுபட்டுத்தோல்வி கண்டதனுல் தற்கொலை செய்யத் துணிகிறுள் ஒரு தங்கை. பாசத்தின் விளைவால் ஏற்பட்ட விளைவுகளைக்கொண்டு பின்னப்பட்டது தான் கொட்டடி உதயசூரியன் நாடகமன்றத்தாரின் 'பாசத்தின் எதிரொலி' சென்ற சனிக்கிழமை கொட்டடி மீனுட்சி அம்மன் கோவில் நிதிககாக கொட்டடி நமசிவாய வித்தியாசாலையில் கலையரசு சொர்ணலிங்கம் தலைமையில் நடைபெற்ற இந்த நாடகம் யாழ்ப்பாணத்தில் நாடகக்கலை வளர்ச்சியடைந்து வருகிறது என்பதற்கு ஓர் எடுததுக்காட்டாக அமைந்தது எனலாம்.

நாடகததில் பிரதம பாத்திரமான சேகர் பாத்திரத்தை ஏன்று நடித்த சோ. தவலிங்கம் பைத்தயக்காரனுக வந்தபொழும் தன தங்கைக்குக் கல்யாணம் பேசுவதற்காக மாப்பிள்ளை வீடு தேடிச் சென்று 'என தங்கையை ஏற்றுக்கொள்வீர்களா ரவி'! என்று இன்ஸ்பெக்டர் ரவியைக் கேட்டபோதும் தங்கையின் வாழ்வில் அக்கறை கொண்ட அண்ணன் எப்படி இருப்பான் என்பதை அப்படியே நடிப்புமூலம் எடுத்துக்காட்டினுர் என்பதை ஏற்றுகொள்ளத்தான் வேண்டும்.

இன்ஸ்பெகடர் ரவியாக நடித்த என்.முததுக்குமாருவுக்கு நல்ல வேடப்பொருத்தம. கண்ணியம், கடமை, கட்டுப்பாடு அததுடன் பெருமையில்லாத பெருங்குணம் இத்தனையும் கொண்டவர்தான் இன்ஸ்பெக்டர் ரவி என்பதை முகபாவங்களாலும் உள் உணர்ந்த நடிப்பாலும் ஏற்ற பாத்திரத்துக்கே உயர்வுதேடிவிட்டார் அவர்.

"உம்...நானென்ன உடைந்த வீடா ஓட்டுவதற்கு"—இப்படி தங்கையுடன் மோதுகிறுர் வில்லன் பாலன். அப்பொழுது ரசிகர்கள் கூட்டத்தில் ஏற்பட்ட அமைதியிலிருந்து வில்லனின் நடிபபின் தரத்தை மதிப்பிடக் கூடியதாகவிருந்தது. மது போதையால் மயங்கிய கண்களும், ஆணவத்தால் செருக்கேறிய முகமும் வார்த்தையில் யாரையும் அலட்சியம் செய்யும் சுபாவமும் இத்தனையும் சேர்த்து வில்லனென்றுல் இப்படித்தான் இருப்பான்என்பதை ஒப்புக்கொள்ளக்கூடியதாகநடித்துவிட்டார், வில்லன் பாலனை நடித்த திரு. இரா. பாலசுப்பிரமணியம் வேஷப்பொருத்தம் அவர்ஏற்ற பாகத்துக்கு மெருகூட்டியது.

குமாராக நடித்த மகேந்திரன். குமார் ஒரு குணசீலன், நேர்மைக்கு நியாயத்துக்கு வாதாடுபவன் என்பதை நடிப்புத்திறத்தால் விளங்க வைத்தார். காதலிக்கும்போது அவர் நடிப்பின் தரம் குறையவில்லை.

குமாரின் தந்தை வேலாயுதபிள்ளையாக வந்த திரு. அமிர்தலிங்கம் அசல் வயோதிபராகவே நடித்தார். 'இக்காலப் பெடியன்கள்' என்று கூறி நாசுக்காக இக்கால நாகரிகத்தைக் 'கழட்டும்'போது நன்ருகத்தான் இருந்தது.

வேல்விழி, மலர்க்கொடி, வில்லி ஆகிய பாத்திரங்களைத் தாங்கி நடித்தவர்களும் தமது பாத்திரத்தை உணர்ந்து நடித்தார்கள்.

முனுசாமியாக நடித்த வெற்றிவேலுவின் நடிப்பும் தேவலை.

பொலிஸாகவும், வேலைக்காரனுகவும்இருவேடங்கள்தாங்கி நடித்த டி. யோகரத்தினம், கிழவனுகவந்த செ. தனபாலன், முஸ்லிமாக நடித்த சி. குணரத்தினம் பண்டாவாக நடித்த ராதாரமணன், படித்த பெண்ணுகநடித்தநடேசன், ஆர். கணேசன், த. கணேசலிங்கம், ஆர். கதிர்காமு எல்லோருமே குறையின்றி நடித்தார்கள்.

தரமான நாடகமொன்றைப் பார்த்த திருப்தி ரசிகர் உள்ளங்களில் ஏற்பட்டிருக்கும்.

—க. க


மிகத் திறமையான

பவர்ஸ்

உரங்கள்

கிருமி நாஸ்தினி தெளிக்கும் யந்திரங்களும்

லாபகரமாய் பயிரிட

- புகையிலை
- வெண்காயம்
- மிளகாய்
- மரக்கறி
- நெல்
- வாழை

மற்றும் பழவகைகளும்

கிடைக்குமிடம்

ஏ. பவர்

அன் கொம்பனி லிமிட்டெட்,

த. பெ. 11, கொழும்பு

## யாழ்ப்பாணத்தில் மீன் பிடி பயிற்சி

### அமைச்சருக்கு மகஜர்

யாழ்ப்பாணம், செவ்வாய்
யாழ். நகரில் ஓர் மீன்பிடிப் பயிற்சி நிலயத்தை ஆரம்பிக்குமாறு குருநகர் கலைக் கழகம் மீன்பிடி அமைச்சரை ஒரு மகஜர்மூலம் கேட்டுள்ளது. இது சம்பந்தமாக மீன்பிடி அதிபருக்கும், யாழ்ப்பாண எம்.பி.க்கும் இந்த மகஜரின் பிரதிகள் அனுப்பப்பட்டுள்ளது.

அந்த மகஜரில் குறிப்பிட்டிருப்பதாவது:-

யாழ். நகரில் நவீன மீன்பிடிப்பயிற்சி நிலயம் ஒன்றினை ஆரம்பிப்பது நெடுக்காலமாய் இருந்துவரும் ஓர் முக்கிய தேவை. மீன்பிடித் தொழில் அபிவிருத்தியில் முக்கிய கவனம் செலுத்திவரும் தங்களுக்கு மீன்பிடித் தொழில் வளர்ச்சியடைய இன்றைய இளைஞர்களை நவீன முறையில் பயிற்றுவித்தல் மிகவும் முக்கியம்.

வடமாகாணத்தில் வதியும் வேலையில்லா இளைஞர்கள் பலர் நவீன முறையில் மீன்பிடிக்கும் முறையைக் கற்றுப் பயிற்சிபெற ஆவலாய் உள்ளனர். எனவே ஓர் நவீன மீன்பிடிப் பயிற்சி நிலயம் ஒன்றை யாழ்ப்பாணப் பட்டினத்தில் ஆரம்பித்து வைக்கும்படி மிகப் பணிவுடன் கேட்டுக் கொள்ளுகிறோம். இந்த விடயத்தை அடுத்துவரும் வரவு செலவுத் திட்டத்தில் சேர்த்துக்கொள்ளும்படியும் கேட்டுக் கொள்ளுகின்றோம்.

---

## சரவணைக்கோஷ்டி வெற்றியீட்டியது

வேலணை, செவ்வாய்
சரவணை சனசமூக நிலய விளையாட்டுக் கோஷ்டியினருக்கும் நாவலர் விளையாட்டுக் கழகக் கோஷ்டியினருக்கும் இடையே நடைபெற்ற சிநேகபூர்வமான கைப்பந்தாட்டப் போட்டியொன்றில் சரவணை சனசமூகநிலக்கோஷ்டி வெற்றியீட்டியது. இரண்டு ஆட்டங்களில் சரவணை சனசமூக நிலயச்கோஷ்டியினரும் நாவலர் விளையாட்டுக்கழகத்தினர் ஒரு ஆட்டத்திலும் வெற்றியீட்டினர். போட்டி நாவலர் விளையாட்டு மைதானத்தில் நடைபெற்றது.

---

## நயினாதீவு இளைஞர் கோஷ்டி வெற்றி

நயனாதீவு, செவ்வாய்
நயினாதீவு இளைஞர் கைப்பந்தாட்டக்கோஷ்டிககும், கண்டிக்குளி கைப்பந்தாட்டக் கோஷ்டிக்குமிடையே அரியாலை ஸ்ரீ கலைமகள் சனசமூகநிலய மைதானத்தில் நடைபெற்ற ஸ்ரீ கலைமகள் சவால் வெற்றிக் கிண்ணப் போட்டியில் நயினாதீவு இளைஞர் விளையாட்டுக் கழகம் 15-8, 15-14 புள்ளிகளைப் பெற்று வெற்றியீட்டியது.

---

## கண்ணகை அம்மன் குளிர்த்தி

காரைதீவு, புதன்
காரைதீவு கண்ணகை அம்மன் கோயிலில் குளிர்த்தி பாடும் வைபவம் நேற்று முன் தினம் நடைபெற்றது. கடந்த ஒருவாரமாக தினமும் திருவிழா நடந்துவரும் கோயிலில் நேற்று முன்தினம் குளிர்த்தி பாடப்பெற்றதோடு திருவிழாக்கள் அனைத்தும் முடிவுற்றன.

---

## சுதந்திரக்கட்சி பிரசாரம் ஜூன் மாதம் ஆரம்பம்

திருக்கோணமலை, செவ்வாய்
ஸ்ரீலங்கா சுதந்திரக் கட்சி தனது கட்சிப் பிரசாரத்தை ஜூன் மாதம் முதல் திகதியிலிருந்து மூதூரில் ஆரம்பிக்கமெனத்தெரிகிறது.

## வானொலி நிகழ்ச்சிகள்

### கொழும்பு

செய்திகள்:காலை 7-00, பகல் 12-45, மாலை 6-00, இரவு9-00.)

காலை 6-45 உதயகீதம், 6-50 சைவநற்சிந்தனை, 6-55 இஸ்லாமிய நற்சிந்தனை, 7-15 தேர்ந்த இசை, 7-30 திரைப்படஇசை, 8-00 புல்லாங்குழல், 8-15 இஸ்லாமிய கீதங்கள்.

பகல் 12-00 சித்திரகானம், 1-00 கதம்பஇசை.

மாலை 5-00 பிறந்த தின வாழ்த்துக்கள், 5-15 இளைஞர் மன்றம், 5-45துரை இசை, 6-15 கிராமசஞ்சிகை, 6-45வயலின்.

இரவு 7-00 பேச்சு, 7-15 நேயர் விருப்பம், 7-45நாடகம், 8-00 முஸ்லிம் நிகழ்ச்சி, 9-15 பாமாலை, 9-30 குரல்வகை, 10-00 தமிழோசை (பி. பி. ஸி அஞ்சல்.)

### திருச்சி

(செய்திகள்: காலை 7-15, பகல் 2-00, இரவு 7-15)

காலை 6-45 மங்கள இசை, 6-50 துதிப்பாடல்கள், 7-00 வாத்தியஇசை, 7-10 நிகழ்ச்சிக் குறிப்புகள், 7-30 திருச்சி கே. பட்டம்மாள்-பாட்டு.

பகல் 12-00 தொழிலாளர்களுக்கு, 1-30 இசைக் கோவை, 1-50 குரலிசை, 2-10 திருச்சி கே. பட்டம்மாள்-பாட்டு'

மாலை 4-45 விவிதபாரதி (கர்நாடக சங்கீதம்), 5-45 இசைப்பயிற்சி, 6-15 கிராம நிகழ்ச்சிகள்.

இரவு 7-30 இம்மாதப் பாடல்கள், 7'35 எஸ். மைதிலி பேச்சு, 7-45 ராகம், தானம், பல்லவி மணக்கால் எஸ். ரங்கராஜன்-பாட்டு, 8-40 திரைப் படஇசை, 9-15 ரேடியோ நாடகஇசை, 9-30 அகிலபாரத நாடகநிகழ்ச்சி.

## வடமாகாண ஆசிரியர் சகாய நிதிச் சங்கம்

யாழ்ப்பாணம், புதன்
வடமாகாண ஆசிரியர் சகாய நிதிச் சங்கத்தின் நிர்வாகசபைக் கூட்டமொன்று வண்ணை வைத்தீஸ்வர வித்தியாலய மண்டபத்தில் திரு. எஸ். அம்பிகைபாகன் தலைமையில் கூடி 28-வது ஆண்டு நிறைவுக்கூட்டத்தை 23-2-62ல் நடத்த வேண்டுமென்றும் பிரமாணமாற்றங்கள் அதில் கவனிக்கப்பட வேண்டும் என்றும் தீர்மானஞ்செய்யப்பட்டது.

## விசாகப் பொங்கலும திருவிழாவும

கொடிகாமம், புதன்
கொடிகாமத்திற்குச் சமீபத்திலிருக்கும் சுட்டிபுரம் அம்மன் கோயிலில் வைகாசி விசாக நாளன்று பொங்கல் நடைபெற்று திருவிழா உற்சவமும் ஆரம்பித்துள்ளது. பன்னிரண்டு திருவிழாக்கள் நடைபெற்று தேர்த் திருவிழாவும் நடைபெறும்.

கச்சாய் அம்மாள் கோயிலில் வைகாசி விசாகத்திலன்று விசாகப் பொங்கல் சிறப்பாக நடைபெற்றது. இவ்வைபவத்தையொட்டி பல இடங்களிலிருந்தும் பலர் பாட்டுக்காவடி எடுத்து வந்தனர்.

---

## இலங்கை கலைக் கழகம்

கொழும்பு, செவ்வாய்
இலங்கைக் கலைக் கழகம் கீழைத்தேச நடனத்திற்கான விண்ணப்பப்பத்திரங்களைக் கோரியிருக்கிறது. இம்மாதம் 31-ம் தேதி வரை விண்ணப்பங்கள் பெற்றுக் கொள்ளப்படும் என அறிவிக்கப்பட்டிருக்கிறது.

## மெதடிஸ்த திருச்சபை கூட்டங்கள்

பருத்தித்துறை, செவ்வாய்
மெதடிஸ்த திருச்சபையினரின் எழுப்புதற் கூட்டங்கள் பருத்தித்துறை மெதடிஸ்த தேவாலயத்தில் இம்மாதம் 25ம், 26ம்; 27ம் திகதிகளில் நடைபெறவிருக்கின்றன. இதற்கான ஏற்பாடுகளைச் சபைக் குரவர்கள் கவனித்து வருகின்றனர்.

---

## காங்கேசன்துறையில் 'இலங்கை பெட்ரேல்'

காங்கேசன் துறை, புதன்
இலங்கை பெட்ரோலியம் கூட்டுத்தாபனம் காங்கேசன் துறை ஷெல் விற்பனவு நிலயத்தைதனது உடைமையாக்கியுள்ளது. 'ஷெல் பெட்ரோல் என்ற பெயர் அழிக்கப்பட்டு இலங்கா பெட்ரேல் என்ற பெயர் சூட்டப்பட்டுள்ளது.




# 'பத்திரிகை மசோதா சுதந்திரத்தைப் பறித்துவிடும்'

லண்டன், மே 23

"இலங்கையில் பத்திரிகைச் சுதந்திரத்தைக் கட்டுப்படுத்த நடவடிக்கைகள் எடுக்கப்பட்டு வருகின்றன. இந்த நடவடிக்கை அந்நாட்டின் எதிர்காலத்தை வெகுவாகப் பாதிக்கும். இதுபத்திரிகையாளரை மட்டும் பாதிக்கும் விஷயமல்ல".

இவ்வாறு லண்டன் பத்திரிகை ஒன்றில் 'பத்திரிகைச் சுதந்திரம்' என்னும் பொருள் பற்றி வெளியான கட்டுரையொன்றில் கூறப்பட்டுள்ளது.

மேலும் அப்பத்திரிகையில் கூறப்பட்டுள்ளதாவது:

"காவன்வெல்த் நாடுகளிடையே மதிப்புடைய ஒரு நாடாக முன்னர் கருதப்பட்டு வந்த இலங்கைக்கு, சர்வாதிகார அடக்குமுறையொன்றின் முதல் படியில் கால் வைப்பதா இல்லையா என்னும் பிரச்சினை இன்று எழுந்துள்ளது.

பத்திரிகைகளைத் தேசியமயமாக்குவதற்கென ஆரம்பிக்கப்பட்ட திட்டங்கள் நிறைவேருது போய்விட்ட காரணத்தால் அந்நாட்டு நிதிமந்திரி திரு. பீலிக்ஸ்டயஸ் பண்டாரநாயக்கா, பத்திரிகைகளைத் தேசியமயமாக்குவதற்கு வேறு புக்திகளைத் தேர்ந்து வருகிறார்.

பத்திரிகைகள்சபை ஒரு என்னும் சபையினுல் இலங்கைப் பத்திரிகைகள் அனைத்தின் சுதந்திரமும் பறிபோகும் தறுவாயில் இருக்கின்றது.

பத்திரிகைச் சொந்தக்காரரின் கொள்முதல் உரிமைகளைப் பகிர்ந்துகொள்ளச் செய்யும் போர்வையில் அரசாங்கம் பத்திரிகைகள் மீது கட்டுப்பாடு விதிக்க உத்தேசிக்கலாம். தனக்குச் சார்பானவர்களிடையேதான் அரசாங்கம் பங்குகளைப் பகிர்ந்து கொள்ளும். பத்திரிகைச் சபைகளும் அரசாங்கத்துக்கேற்ப பத்திரிகைகளை நடாத்த இடமுண்டு. செய்திகளின் உண்மை பொய்களைத் தீர்மானிக்கும் அதிகாரம் இந்த சபைக்கு வழங்கப்பட்டுள்ளது. அரசாங்கத்தைத் தாக்கும் செய்தி எதுவும் சிறைத் தண்டனை விளைவிக்கலாமல்லவா? அதற்காக அவை அரசாங்கத்துக்கேற்பவே செய்திகளை வெளியிடும்.

பத்திரிகைச் சுதந்திரம் இருக்கும்வரை தனிப்பட்டவர்களின் சுதந்திரத்துக்குப் பாதுகாப்பு உண்டு. பத்திரிகைகளை இலங்கை அரசாங்கம் கட்டுப்படுத்த முயன்ருல் இலங்கையில் தனிமனிதனின் சுதந்திரம் பறிபோகும் தறுவாயில் இருக்கின்றதென்றே கூற வேண்டும். இலங்கையின் எதிர்காலம் வெகுவாகப் பாதிக்கப்படலாம். பத்திரிகைச் சுதந்திரம் பறிபோனதால், கானு, பாகிஸ்தானில் மக்கள் பெரிதும் பாதிக்கப்பட்டனர். இந்த நிலைமை ஏற்படாது இலங்கை காலத்துடனேயே எச்சரிக்கையாக இருக்கலாம்."

## மழையினுல் டெலிபோன்கள் பழுதடைந்தன

கொழும்பு, புதன்

மழை காரணமாகக் கொழும்பில் 600 டெலிபோன்கள் பழுதடைந்தன. 50 தூரத் தொடர்புகளும் அறுபட்டிருக்கின்றன.

தாங்கள் தொடர்ந்து திருத்த வேலைகளைச் செய்து வருகின்ற போதிலும் டெலிபோனில்லாமல் பல நூற்றுக் கணக்கான மக்கள் பாதிக்கப்பட்டுள்ளார்களென பிரதான என்ஜினியர் திரு. இராசநாயகம் அறிவித்துள்ளார்.

நிலத்தின் கீழுள்ள குளாய்களுள் தண்ணீர் சென்றதனுல் கொழும்பு தெற்கில் மாத்திரம் 250க்கு மேலான டெலிபோன்கள் பாவிக்க முடியாமல் போய்விட்டன என்ருர் அவர்.

வெளியிடத் தொடர்புகளும் பாதிக்கப்பட்டுள்ளது என்று தெரிவிக்கப்பட்டுள்ளது.

## தோட்டங்களில் இலங்கையரை

(1ம் பக்கத் தொடர்ச்சி)

டனை குறைக்கப்பட்டதென்றும், அதன் பின் அவர் விடுதலை செய்யப்பட்டார் என்றும் கூறினர். 5 வருட கடுங்காவல் தண்டனை விதிக்கப்பட்ட பி. ஆர். பெரேரா, 7 வருட சிறைத்தண்டனை விதிக்கப்பட்ட டி. ஜே. கே. ஒபேசேகரா ஆகியோர் 1961-ம் ஆண்டு மே மாதம் விடுதலை செய்யப்பட்டனர் என்றும் கூறினர்.

"இவ்விதம் நான்கு தடவைவைகள் தண்டனை கிடைக்கப்பட்ட கைதிகள் இன்னும் எத்தனை பேர்" என டாக்டர் நாகநாதன் கேட்டார்.

திரு. கருணரத்ன "இங்குள்ள தகவல்களைக் கொண்டு அதற்குப் பதிலளிக்கமுடியாது நீங்கள் சிறைக்குப்போய், நன்னடத்தைடன் நடந்து கொண்டால் நாலில் ஒரு பங்கு தண்டனைக் குறைப்பைப்பெறுவீர்கள்"

டாக்டர் நாகநாதன்: "தடுப்புக் காவல் சட்டத்தின் கீழ் தான் நாங்கள் சிறைக்குப் போவோம்"

## பாகிஸ்தானியர் மீது நடவடிக்கை

புதுடில்லி, மே 23

கேரளத்தில் பிரவேசித்த 177 பாகிஸ்தான் பிரஜைகளில் 22 பேர் வெளியேறினர்கள் என்னும், 5 பேருக்கு வெளியேற்ற நோட்டீஸ் கொடுக்கப்பட்டிருக்கிறதென்றும், 10 பேர் மீது நடவடிக்கை எடுத்துக் கொள்ளப்பட்டிருக்கிறதென்றும்அறிவிக்கப்பட்டது.

## எல்லைக்காந்தி காவல் நீடிப்பு

ராவல்பிண்டி, மே 23

எல்லைக்காந்திகான் அப்துல் கபார்கானை காவலில் வைத்திருக்கும் காலஎல்லையை இவ்வருடம் அக்டோபர்மாதம் 10ம் திகதிவரை நீடிக்கப்பட்டிருப்பதாக அரசங்கம் வெளியிட்ட ஒரு அறிக்கை கூறுகிறது.

1961ம் ஆண்டு ஏப்ரல் மாதத்தில் எல்லைக்காந்தி கைது செய்யப்பட்டுக்காவலில் வைக்கப்பட்டார்.

## அல்ஜீரியாவில் நேற்று 27 கொலை

அல்ஜயர்ஸ், மே 23

அல்ஜீரியாவில் நேற்று நடைபெற்ற பலாத்கார சம்பவங்களில் 27பேர் கொல்லப்பட்டனர். இவர்களிற் பெரும்பாலோர் அல்ஜீரியர்கள் ஐவர் பெண்கள்.

## 3-ம் திட்டத்துக்கு 320 லட்சம் பவுன் கடனுதவி

புதுடில்லி, மே 23

3-ம் ஐந்தாண்டுத் திட்டத்துக்கு மேலும் 320 லட்சம் பவுன் கடன் அளிக்கும் ஒப்பந்ததத்தில் பிரிட்டன் இன்று கைச்சாத்திட்டது. பிரிட்டன் மொத்தம் 9 கோடி பவுன் கடனளிக்கும். 25 ஆண்டுகளில் இக்கடன் திருப்பிக்கொடுக்கப்படும்.

## விசாரணை நடத்த உத்தரவு

புதுடில்லி, மே 23

கல்கத்தாவுக்கருகே நடைபெற்ற ரயில் விபத்துப்பற்றி விசாரணை நடத்த உத்தரவிடப்பட்டிருக்கிறது.

ஆசிரியருக்குக் கடிதம்

## பஸ் இல்லை!

தாவடி, மானிப்பாய், சுதுமலை ஊடாக சென்ற பல வருடங்களாக இரு பஸ்வண்டிகள் ஓடி பிரயாணிகளின் பிரயாணங்களுக்கு வசதி செய்தன. ஆனல் சென்ற சில மாதங்களாகக் காலை 8 மணியிலிருந்து 10 மணிவரைக்கும், மாலை 3 மணியிலிருந்து 6 மணி வரைக்கும் ஓடும் பஸ்களை 'ஸ்கூல் சேவிஸ்' என்று யாழ்ப்பாணம் கீரிமலைப்பாதையில் ஓட்டுகிருர்கள். ஆதலால் சுதுமலையிலுள்ள பாடசாலைச் சிருர்களும், கடைகளிலும் காரியாலயங்களிலும் வேலைசெய்பவர்களும் நேரத்துக்குத் தம் வேலைத் தலத்துக்கு செல்ல இயலாது கஷ்டப்படுகின்றனர். போக்குவரத்து அதிகாரிகளிடம் கூறினுல் அவர்கள் எதுவித அக்கறையும் காட்டுவதாக இல்லை. ஆகவே அரசாங்கமோ, போக்குவரத்து மந்திரியோ அல்லது போக்குவரத்து மேல் அதிகாரிகளோ இவ்விஷயத்தை உடனடியாகக் கவனிப்பார்களென எதிர்பார்க்கிருேம்.

ச. சுந்தரமூர்த்தி

சுதுமலை,
மானிப்பாய்

## தேவை

நல்ல நிலையில் நடைபெறும் எமது ஸ்தாபனத்தில் உற்பத்தி செய்திருக்கும் நாளாந்த பாவனைக்குரிய பொருட்கள் விற்பனை செய்யக்கூடிய வான் சேல்ஸ் மென்களும், பைசிக்கில் சேல்ஸ்மென்களும், கன்வெஸ்சர்களும், தையல் வேலையில் நல்ல அனுபவமுள்ள பெண்களும், தமிழ், ஆங்கில தட்டெழுத்தாளர்களும்(பெண்கள்) பலபாகங்களுக்கும் கிளை அதிகாரிகளும் உடன் தேவை. 10 சத முத்திரையுடன் விண்ணபிக்கவும்.

யோகா டிஸ்ரிபியூடேஸ், 3-ம் கட்டை ஒழுங்கை, கல்வியங்காடு, யாழ்ப்பாணம்.

# 'குற்றச் சாட்டுக்கள் பொய்யானவை, ஆதாரமற்றவை'

## வானெலி பிரதம என்ஜினியர் அனுப்பியுள்ள கடிதம்

கொழும்பு, புதன்

"வானெலி அதிபர் திரு. ருனி டி' மெல்லினுல் என்மீது சுமத்தப்பட்ட குற்றங்கள் யாவும் பொய்யானவை, ஆதாரமற்றவை."

இவ்வாறு வானெலி பிரதம பொறியியல் நிபுணர் திரு. என். எஸ். விக்ரமசிங்க கல்வி ஒலிபரப்பு நிரந்தரக் காரியதரிசி திரு. எச். ஜினதாசாவுக்கு அனுப்பியுள்ள கடிதம் ஒன்றில் குறிப்பிட்டிருக்கிருர்.

வானெலி அதிபர் திரு. ருனி டி' மெல்லுக்கும் திரு. விக்ரமசிங்காவுக்குமிடையே நடைபெற்ற ஒரு டெலிபோன் பேச்சுவார்த்தையைத் தொடர்ந்து ஆரம்ப விசாரணை ஒன்று நிரந்தரக் காரியதரிசியால் மார்ச் 29-ல் நடைபெற்றது. இவ்விசாரணையின் பிரகாரம் திரு. விக்ரமசிங்காவுக்கு அனுப்பப்பட்டிருந்த குற்றப் பத்திரிகைக்குப் பதிலளிக்கையிலேயே திரு. விக்ரமசிங்கா மேற்கண்டவாறு கூறியிருக்கிருர். விசாரணையின்போது கூறியிருப்பதற்கு மேலாக எதையும் தான் கூற விரும்பவில்லையென பொறியியல் நிபுணர் அறிவித்திருக்கிருர். தன் மேல் இவ்விதக் குற்றச்சாட்டை சுமத்துவதன்மூலம், திரு. மெல் மீது தான் எவ்வித நடவடிக்கையும் எடுக்காமல் தடுப்பதையே தன் முழு நோக்கமாக திரு. மெல் கொண்டுள்ளார் என்றுதான் எண்ண வேண்டியிருக்கின்றது என்றும் விக்ரமசிங்கா தெரிவித்துள்ளார்.

## சியாராலியோன் பொதுத்தேர்தல்

லண்டன், மே 25

சென்ற வருஷம் ஏப்ரல் மாதம் விடுதலையடைந்த சியாராலியோன் நாட்டின் முதலாவது பொதுத்தேர்தல் வாக்களிப்பு இன்று ஆரம்பமாகிறது.

வியாபாரம் பெருக விளம்பரம் செய்க

இப்பொழுது திரையிடப்படுகிறது
கெப்பிட்டல் (கொழும்பு) நவா (கொம்பனித்தெரு) விஜயா (மட்டக்களப்பு)
மொடர்ன் (பதுளை) விஜிதா (மஸ்கெலியா) கிரசன்ட் (புத்தளம்)



ஈ. வி. சரோஜா, டி. ஆர். மகாலிங்கம்
எம். ஆர். ராதா, அசோகன், எம். வி. ராஜம்மா
பத்மினி பிரியதரிசனி
நடித்த
இரத்தினபுரி இளவரசி
டைரக்ஷன்: ராமண்ணு

5வது வெற்றி வாரம்!
கிங்ஸ்லி (கொழும்பு) பிளாஸா (வெள்ளவத்தை) வெலிங்டன் (யாழ்ப்பாணம்)
மற்றும் 10 திரைகளில்
சிவாஜி கணேசன் - பி. சரோஜா தேவி
நடித்த
பாலும் பழமும்

மனேஹரா (யாழ்ப்பாணம்)
பண்டரிபாய் - பாலாஜி
நடித்த
அன்பு எங்கே?

வடமாகாண கிரிக்கெட் வீரர் 1962

'விக்னராஜா' பரிசுக் கிண்ணத்துக்காக 'ஈழநாடு' நடாத்தும் தெரிவு.

1962-ம் ஆண்டின் வடமாகாண கிரிக்கெட் வீரராகப் பின்வருபவரை நான் தெரிவு செய்கின்றேன்.

கிரிக்கெட் வீரர் ____________

கல்லூரி ____________

எனது பெயர் ____________

விலாசம் ____________

*இக்கூப்பனைக் கத்தரித்து 'கிரிக்கெட் வீரர் 1962', C/o. 'ஈழநாடு', தபாற்பெட்டி எண்: 49, யாழ்ப்பாணம் என்ற விலாசத்துக்கு அனுப்புக.

இப்பத்திரிகை ஈழநாடு லிமிட்டெட் ஸ்தாபனத்தாரால் யாழ்ப்பாணம் சிவன் கோவில் மேலை வீதி 63-ம் இல்லத்திலுள்ள அவர்களது அச்சகத்தில் 1962-ம் ஆண்டு மே மாதம் 24-ந் திகதி அச்சிட்டு வெளியிடப்பட்டது.